வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959

Reg. No. : P. 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu




Email : eelanaduweekly@gmail.com | மலர் : 06 | 24.04.2025 வியாழக்கிழமை | இதழ் : 115 | பக்கங்கள் : 12

### தீர்வை வரி குறித்த

# அமெரிக்காவுடனான பேச்சுகளில் வெற்றி!

## ஜனாதிபதி அநுர குமார அறிவிப்பு

- கூட்டு அறிக்கை விரைவில் வெளியாகும்



கொழும்பு, ஏப்ரல் 24

**அமெரிக்காவுடனான தீர்வை வரி குறித்த பேச்சுகள் வெற்றியடைந்துள்ளன - என்று ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்க தெரிவித்துள்ளார்.**

இரத்தினபுரியில் நேற்று புதன்கிழமை நடைபெற்ற பிரசார கூட்டத்தில் உரையாற்றியபோதே அவர் இதனைக் கூறினார்.

அமெரிக்காவுடனான பேச்சில் எட்டப்பட்ட தீர்மானங்கள் கூட்டு அறிக்கை ஊடாக விரைவில் அறிவிக்கப்படும் என்றும் ஜனாதிபதி மேலும் தெரிவித்தார்.

இதேவேளை, அமெரிக்க வர்த்தக பிரதிநிதிகளுக்கும் இலங்கை அதிகாரிகளுக்கும் இடையே வரி தொடர்பிலான உயர் மட்ட கலந்துரையாடல் வாஷிங்டன் டி. சியில் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

பரஸ்பர வரிகளால் ஏற்படும் தொடர்ச்சியான சவால்களை நிவர்த்தி செய்யும் நோக்கிலேயே இந்த கலந்துரையாடல் நடைபெற்றது. இதில், இலங்கை பிரதிநிதிகள் 11

## டான் பிரியசாத் கொலை; 3 சந்தேகநபர்கள் கைது!

கொழும்பு, ஏப். 24

சிறீ லங்கா பொதுஜன பெரமுனவின் உள்ளூராட்சி சபை தேர்தல் வேட்பாளரும் ராஜபக்ஷக்களுக்கு நெருக்கமானவருமான டான் பிரியசாத் கொலையுடன் தொடர்புடைய மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது.

கொழும்பு - வெல்லம்பிட்டி பகுதியில் அடுக்குமாடி குடியிருப்பின் மேல் தளத்தில் நேற்று முன்தினம் இரவு 9.10 மணியளவில் டான் பிரியசாத் 11

## துப்பாக்கி தோட்டாக்களே இன்று நாட்டை ஆள்கின்றன!

### எதிர்க்கட்சி தலைவர் சஜித்



கொழும்பு, ஏப். 24

இன்று நாட்டை ஆட்சி செய்வது மக்களின் இறையாண்மையோ அல்லது நாட்டின் சட்டமோ அல்ல. மாறாக ரி -56 துப்பாக்கி தோட்டாக்கள் மற்றும் குண்டுகளே - இவ்வாறு எதிர்க் கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ விசனித்துள்ளார்.

நேற்றைய தினம் களுத்துறை - அகலவத்தையில் நடந்த பிரசார கூட்டத்தில் 11

## முஸ்லிம் மக்களிடம் அநுர மன்னிப்பு கோர வேண்டும்!

### சிறீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ்

அக்கரைப்பற்று, ஏப். 24

"பயங்கரவாத தடைச் சட்டத்தை ஒருநாளும் பயன்படுத்த மாட்டேன் என்று சொன்ன அநுர குமார திஸநாயக்க முதன்முதலில் எங்களுக்கு எதிராகவே பயன்படுத்தினார். ஆதலால், அவர் முஸ்லிம்களிடம் மன்னிப்பு கோர வேண்டும்", என்று சிறீலங்கா 11

## அரசாங்க கட்சியே எமது பொது எதிரி!

### விக்னேஸ்வரன் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஏப். 24

எம்மைப் பொறுத்த வரையில் எமது பொது எதிரி அரசாங்கக் கட்சி. அதனை இனிமேலும் எம்மிடையே வளரவிடக்கூடாது. தொழிற்சங்கங்கள் ஊடாகவும் தமிழ்த் தேசியக் கட்சிகளின் பிளவுகளின் நிமித்தமும் அரசாங்கக் கட்சி வடக்கு, கிழக்கில் கால் பதிக்க நேரிட்டது. ஆனால், இம்முறை உள்ளூராட்சி தேர்தலில் அதனை நடைபெற விடமாட்டோம். தேர்தல் முடிந்தவுடன் தமிழ்த் தேசியக் 11

## முன்னாள் ஜனாதிபதிகளின் சலுகைகள் மேலும் குறைப்பு!

கொழும்பு, ஏப். 24

முன்னாள் ஜனாதிபதிகளுக்கு வழங்கப்படும் உத்தியோகபூர்வ வாகனங்களின் எண்ணிக்கை, மாதாந்த எரிபொருள் கொடுப்பனவை குறைப்பதற்கு அரசாங்கம் முடிவு செய்துள்ளது.

இது தொடர்பான சுற்றறிக்கை ஜனாதிபதியின் செயலாளரால் வெளியிடப்பட்டுள்ளது.

இதன்படி, முன்னாள் ஜனாதிபதிகளுக்கு வழங்கப்படும் வாகனங்களின் எண்ணிக்கை 11

## தமிழ்த் தேசிய உணர்விலிருந்து விலகவில்லையென நிரூபியுங்கள்!

### சித்தார்த்தன் மக்களிடம் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஏப். 24

தமிழ் மக்கள் தமிழ்த் தேசிய உணர்வில் இருந்து விலகிச் செல்லவில்லை என்பதை உள்ளூராட்சித் தேர்தலில் ஆணித்தரமாக நிரூபிக்கவேண்டும் - இவ்வாறு வேண்டுகோள் விடுத்துள்ளார் ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணியின் இணைத்தலைவர் த. சித்தார்த்தன்.

யாழ்ப்பாணத்தில் நேற்று அவர் நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

மேலும், தென்னிலங்கை கட்சிகள் இங்கு போட்டியை கொடுக்கும் நிலைமை ஆரோக்கியமானதல்ல. தமிழ் மக்கள் தமிழ்த் தேசியத்தை விட்டு செல்லவில்லை என்பதை ஆணித்தரமாக நிரூபிக்க வேண்டிய ஒரு காலகட்டத்தில் நிற்கிறோம். தமிழ் மக்கள் தமிழ்த் தேசிய உணர்வில் இருந்து விலகவில்லை 11

## வடக்குக்கு மீளவருகிறார் ஜனாதிபதி

வவுனியா, ஏப். 24

ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்க நாளை மறுதினம் மீண்டும் வடக்கு மாகாணத்துக்கு வருகை தரவுள்ளார்.

எதிர்வரும் 6ஆம் திகதி நடைபெறவுள்ள உள்ளூராட்சி தேர்தலுக்கான பிரசார கூட்டங்களில் பங்கேற்பதற்காகவே 11



## வெள்ளி, சனி, சந்திரன் நாளை வானில் ஒன்றாகத் தெரியும்!

கொழும்பு, ஏப். 24

வெள்ளி, சனி கோள்கள் மற்றும் சந்திரன் ஆகியவை நாளை வெள்ளிக்கிழமை அதிகாலை முதல் வானில் நெருக்கமாக தெரியும் என்று வானியலாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இலங்கையர்கள் இந்த அரிய நிகழ்வை 11

## நாடளாவிய மின் தடை; காரணம் வெளியானது!

கொழும்பு, ஏப். 24

கடந்த பெப்ரவரி மாதம் 9ஆம் திகதி நாடு முழுவதும் மின் தடை ஏற்பட்டமைக்கு நிபுணர்கள் குழு காரணத்தை கண்டுபிடித்துள்ளது.

இதன்படி, சூரிய மின்கலங்கள் மூலம் தேசிய மின் கட்டமைப்புக்கு வழங்கப்படும் மின்சாரத்தின் அளவு அதிகரித்தமையால் தேசிய மின் கட்டமைப்பின் நிலைத் தன்மை குறைந்து மின் தடை 11

## சைபர் குற்றங்கள் அதிகரிக்கின்றன!

கொழும்பு, ஏப். 24

இந்த வருடத்தில் இதுவரையான காலப்பகுதியில் 2 ஆயிரத்து 500 சைபர் குற்றங்கள் பதிவாகியுள்ளன என்று இலங்கை கணினி அவசர தயார் நிலை குழுவின் அதி காரி சாருக தமுனுபொல தெரிவித்துள்ளார்.

இவற்றில் 164 குற்றச் சம்பவங்கள் இணைய மோசடிகளுடன் தொடர்புடையவை. இதனுடன் தொடர்புடைய 162 கணக்குகள் முடக்கப்பட்டுள்ளன. 11

**உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாணவனை மோ. சைக்கிளால் மோதி காயப்படுத்திவிட்டு தப்பிச்சென்ற பெண்!

யாழ்ப்பாணம், ஏப். 24

பாடசாலை மாணவன் ஒருவனை மோட்டார் சைக்கிளில் சென்ற பெண் ஒருவர் மோதி விபத்தை ஏற்படுத்திவிட்டு தப்பிச் சென்ற சம்பவம் வட்டுக்கோட்டையில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றுள்ளது.

விபத்தில் சிக்கிய மாணவன் கைமுறிந்த நிலையில் தற்போது யாழ். போதனா மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகிறார்.

இந்த சம்பவம் தொடர்பில் மேலும் அறிய வருவதாவது,

வட்டுக்கோட்டை பாடசாலை ஒன்றில் கல்வி கற்று வரும் அந்த மாணவர் நேற்று முன்தினம் வழமை போன்று தனது சைக்கிளில் பாடசாலைக்கு சென்றுள்ளார். பாடசாலையை அவர் அண்மித்த நிலையில், பின்னால், மோட்டார் சைக்கிளில் வந்த பெண் தன்னை மோதிவிட்டு அங்கிருந்து தப்பிச் சென்றார் என்று மாணவன் கூறியுள்ளார்.

விபத்தின் பின்னர், பாடசாலை முன்பாக வீதி போக்குவரத்து கண்காணிப்பு பணி யில் ஈடுபட்டிருந்த சிரேஷ்ட மாணவர்கள் வீதியில் கிடந்த தன்னை தூக்கிச் சென்று முதலுதவி அளித்தனர் என்றும் தான் விபத்தில் சிக்கியமை தொடர்பாக பாடசாலை அதிபர், ஆசிரியர்கள், பெற்றோருக்கு தெரியப்படுத்தினர் எனவும் பாதிக்கப்பட்ட மாணவன் மேலும் கூறியுள்ளார்.



விபத்தில் சிக்கி கையில் எலும்பு முறிவும் காயமும் ஏற்பட்ட நிலையில், மாணவன் உடனடியாக சங்கானை மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டு, மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டார்.

பாடசாலை ஆரம்பிக்கும் நேரம் மற்றும் நிறைவுறும் நேரங்களில் அப்பகுதியில் போக்குவரத்துப் பொலிஸார் வீதி போக்குவரத்துக் கடமையில் வழமையாக ஈடுபட்டு வரும் நிலையில், கடந்த சில நாட்களாக போக்குவரத்து பொலிஸார் கடமையில் இல்லாததை அவதானிக்க முடிவதாக மாணவர்களும் பொது மக்களும் சுட்டிக்காட்டியுள்ளனர். (ஐ-05)

# சட்டவிரோத மீன்பிடி; இருவர் கைதாகினர்!

வடமராட்சி, ஏப். 24

வடமராட்சி கிழக்கில் சட்டவிரோதமாக ஒளிபாய்ச்சி மீன்பிடித்த இருவர் நேற்றுமுன்தினம் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது.

வடமராட்சி கிழக்கு கடற்பகுதிகளில் இடம்பெறும் சட்டவிரோத தொழில் நடவடிக்கைகளை கட்டுப்படுத்தும் நோக்கில் வெற்றிலைக்கேணி கடற்படையினர் தொடர் சுற்றிவளைப்புகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இந்த நடவடிக்கையின் ஒரு பகுதியாக நேற்றுமுன்தினம் கட்டைக்காட்டு கடற்பரப்பில் மேற்கொண்ட சுற்றிவளைப்பில் சட்டவிரோதமாக ஒளிபாய்ச்சி மீன் பிடித்த இருவரை இரண்டு படகுகளுடன் தாம் கைது செய்துள்ளனர் என்று கடற்படையினர் தெரிவித்தனர்.

கைதானவர்கள் மேலதிக சட்ட நடவடிக்கைக்காக யாழ்ப்பாணம் நீரியல் வளத்திணைக்கள அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ-02-05)

# ஞானச்சுடர் மலர் வெளியீடும் உதவி வழங்கல் நிகழ்வும்!

வடமராட்சி, ஏப். 24

ஞானச்சுடர் 328ஆவது மலர் வெளியீடும் மாணவர்களுக்கான சைக்கிள்கள் வழங்கல் நிகழ்வும் நாளை வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

தொண்டைமானாறு சந்நிதியான் ஆச்சிரம சைவ, கலை, பண்பாட்டு பேரவையின் ஏற்பாட்டில், ஆச்சிரம முதல்வர் மோகனதாஸ் சுவாமிகள் தலைமையில் சந்நிதியான் ஆச்சிரமத்தில் இந்த நிகழ்வுகள் நடைபெறவுள்ளன.

மலர் வெளியீட்டுரையை இளைப்பாறிய கிராம சேவையாளர் க. சிறீஸ்கந்தராசா, மதிப்பீட்டுரையை சட்டத்தரணியும் பதில் நீதிவானுமான சோ. தேவராஜா ஆகியோர் நிகழ்த்துவர்.

இதனைத் தொடர்ந்து 6 மாணவர்களுக்கு சைக்கிள்கள் வழங்கப்படவுள்ளன. (ஐ-02)

# ஆசிரியர் கலாசாலையில் புதன் ஒன்றுகூடல் நிகழ்வு



யாழ்ப்பாணம், ஏப். 24

கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில் புதன் ஒன்றுகூடல் நேற்று காலை 08.30 மணிக்கு கலாசாலை அதிபர் சந்திரமௌலீசன் லலீசன் தலைமையில் நடைபெற்றது.

இதில், அதிதி பேச்சாளராக யாழ்ப்பாண தேசிய கல்வியியற் கல்லூரியில் இருந்து அண்மையில் இளைப்பாறுகை பெற்ற திருமதி ஜெயலட்சுமி உதயகுமார் கலந்துகொண்டார்.

கணித, விஞ்ஞான நெறி ஆசிரிய மாணவர்களின் ஏற்பாட்டில் திருமதி. கீர்றா தவராசா நெறிப்படுத்தலில் நடைபெற்ற இந்த ஒன்றுகூடல் நிகழ்வில் ஈஸ்டர் ஞாயிறு சிறப்பம்சமாக உரை நடைபெற்றது. இதனை விஞ்ஞான நெறி ஆசிரிய மாணவி திருமதி பெலினி சசிராசன் ஆற்றினார். இதனைத் தொடர்ந்து இயேசுவின் திருப்பாடுகளின் காட்சிகள் காணொலி மூலம் காட்சிப்படுத்தப்பட்டன.

சித்திரச்சதயம் திருநாவுக்கரசு நாயனார் குரு பூசையாக அமைந்த சிறப்பை வெளிப்படுத்தி விஞ்ஞான நெறி ஆசிரிய மாணவர் இளகுநாதன் செந்தூர்ச்செல்வன் "என் கடன் பணி செய்து கிடப்பதே" என்ற பொருளில் உரையாற்றினார்.

அதனைத் தொடர்ந்து அதிதி பேச்சாளருக்கான அறிமுக உரையை கலாசாலையின் உப அதிபர் திருமதி சத்தியா ரஜ்ஜித் மேற்கொண்டார்.

அதிதியாக கலந்துகொண்ட திருமதி ஜெயலட்சுமி உதயகுமார் தனது வாழ்வியல் அனுபவங்களை குறிப்பிட்டதோடு ஆசிரியரும் மென்திறன்களும் என்ற கருப்பொருளில் உரையாற்றினார். அதிதி கலாசாலை முகாமைத்துவ குழுவினரால் கௌரவிக்கப்பட்டார். (ஐ)

# சைவநாதம் மலருக்கு ஆக்கங்கள் கோரல்!

யாழ்ப்பாணம், ஏப். 24

அகில இலங்கை சைவப்புலவர் சங்கத்தால் எதிர்வரும் ஜூன் முதலாம் திகதி நடத்தப்படவுள்ள சைவப்புலவர் பட்டமளிப்பு நிகழ்வு, சைவ மாநாட்டில் வெளியிடப்படவுள்ள சைவநாதம் - 12 மலருக்கான ஆக்கங்கள் சைவப்புலவர்களிடம் கோரப்பட்டுள்ளதாக அகில இலங்கை சைவப்புலவர் சங்க செயலாளர் செ. த. குமரன் அறிவித்துள்ளார்.

அனுப்ப வேண்டிய ஆக்கங்கள் இளம்சைவப்புலவர், சைவப்புலவர் பாடத்திட்டத்துக்கு உட்பட்டதாக இது வரையில் சைவநாதம் மலரில் வெளிவராத கட்டுரைகளாக அமைதல் வேண்டும். கட்டுரைகள் அச்சுப் பதிப்பில் 4 பக்கங்களுக்கு மேற்படாதவாறு மென் பிரதியாக Saivappulavarsangam1960@gmail.com மின்னஞ்சலுக்கு எதிர்வரும் மே 15 ஆம் திகதிக்கு முன்னதாக அனுப்பிவைத்தல் வேண்டும் என்றும் குறிப்பிடப்பட்டது. (ஐ)

# வலி. வடக்கில் விவசாய செய்கையை விரைவுபடுத்துவதற்கு நடவடிக்கை!



யாழ்ப்பாணம், ஏப். 24

வலிகாமம் வடக்கு பிரதேச செயலர் பிரிவில் கடந்த ஆண்டு மக்கள் பயன்பாட்டுக்கு அனுமதிக்கப்பட்ட காணிகளில் விவசாய செய்கையை விரைவுபடுத்துவதற்கு தேவையான வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பது தொடர்பான கலந்துரையாடல் வடக்கு ஆளுநர் செயலகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

இந்தக் கலந்துரையாடலில் வடக்கு ஆளுநரின் செயலாளர், யாழ். மாவட்ட பதில் அரசாங்க அதிபர், தெல்லிப்பழை பிரதேச செயலாளர், வலிகாமம் வடக்குப் பிரதேச சபை செயலரின் பிரதிநிதி, வீதி அபிவிருத்தி அதிகார சபையினர், வீதி அபிவிருத்தித் திணைக்கள மாகாண பணிப்பாளர், இராணுவத்தினர் பங்கேற்றனர்.

கலந்துரையாடலின் ஆரம்பத்தில் வடக்கு மாகாண ஆளுநர் நாகலிங்கம் வேதநாயகன் கருத்துத் தெரிவிக்கையில்,

கடந்த ஆண்டு ஆரம்பத்தில் மக்களின் விவசாய நடவடிக்கைகளுக்கென காணிகள் அனுமதிக்கப்பட்டிருந்தன. ஆனால், அந்தக் காணிகளில் மக்கள் விவசாய நடவடிக்கைகளை முன்னெடுப்பதில் பல இடர்பாடுகளை எதிர்கொள்கின்றனர். இதுதொடர்பாக விவசாயிகளால் எமக்குப் பல்வேறு முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றிருக்கின்றன. குறிப்பாக, அவர்களுக்கான மின்சார வசதி இன்னமும் ஏற்படுத்திக் கொடுக்கப்படவில்லை. மின்சார வசதி ஏற்படுத்திக் கொடுப்பதற்கு பாதைகள் அமைக்கப்பட வேண்டும் என மின்சார சபையினர் கோருகின்றனர். பாதைகள் அமைப்பதற்கு சில இடங்களில் இராணுவத்தினரின் பாதுகாப்பு வேலிகள் இடையூறாக இருக்கின்றன. எனவே, இந்த விடயங்களை களைந்து விவசாயிகள் முழுமையாக விவசாயம் மேற்கொள்வதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டுமென வலியுறுத்தினார்.

வீதிகள் செப்பனிடுவதற்கு இடையூறாக உள்ள பாதுகாப்பு வேலிகளை அகற்றுவது தொடர்பில் இராணுவத்தினருடன் நேரில் சென்று பார்வையிடுவதற்கு இந்தக் கலந்துரையாடலில் முடிவு செய்யப்பட்டது. அதற்கமைவாக விரைவில் வீதி அபிவிருத்தி அதிகார சபையின் வீதிகள், வீதி அபிவிருத்தி திணைக்களத்துக்கு சொந்தமான வீதிகள், பிரதேச சபையின் வீதிகள் என்பனவற்றை உடனடியாகச் செப்பனிடுவதற்கும் தீர்மானிக்கப்பட்டது. இதற்கான நிதி ஒதுக்கீடுகள் உள்ளன என யாழ். மாவட்டப் பதில் அரசாங்க அதிபர் ம. பிரதீபன் தெரிவித்தார்.

மின்சார இணைப்புக்கான கோரிக்கை கடிதத்தை வழங்குமாறு மின்சார சபையினர் கேட்டுக்கொண்டனர். பயனாளிகளின் மின்சார இணைப்புக் கட்டணத்தை வழங்குவதற்கு யாழ். மாவட்ட பதில் அரசாங்க அதிபர் இணக்கம் தெரிவித்தார்.

பயனாளிகள் விவசாய நடவடிக்கை மேற்கொள்வதற்காக காலையில் வந்து மாலையில் செல்ல வேண்டும் என்ற நிலைமை காணப்படுகிறது. எனவே, அவர்கள் அங்கு கட்டுமானங்களை மேற்கொள்வதற்கு அனுமதிக்க வேண்டும் என்ற கோரிக்கையும் இராணுவத்தினரிடம் முன்வைக்கப்பட்டது. இந்த மனிதாபிமான கோரிக்கை தொடர்பில் கலந்துரையாடி பதிலளிப்பதாக இராணுவத்தினர் குறிப்பிட்டனர். விவசாய கிணறுகளைப் புனரமைத்துக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும் வடக்கு ஆளுநர் தெரிவித்தார்.

தொடர் நடவடிக்கைகளை இராணுவத்தினருடனும், சம்பந்தப்பட்ட தரப்புகளுடனும் தெல்லிப்பழை பிரதேச செயலாளர் தலைமையில் கலந்துரையாடி எடுக்குமாறும் இதன்போது வடக்கு ஆளுநர் பணிப்புரை விடுத்தார். (ஐ-02-05)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu ඊළනාඩු
24.04.2025 வியாழக்கிழமை
விசுவாவசு வருடம், சித்திரை 11

“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

## தமிழர்களுக்கான பட்டறிவு

“ஜனாதிபதி பதவியேற்று ஆறு மாதங்கள் கடந்துவிட்ட நிலையிலும் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் விடயத்தில் கவனம் செலுத்தவில்லை”, என்று ரெலோவின் தலைவரும் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்திருக்கிறார். ஆறு மாதமல்ல, ஆறு வருடங்கள் கழிந்தாலும் அந்த விடயத்தில் எதுவும் நடக்காது. பதினைந்து வருடங்களாக நடைபெறாத விடயம் எவ்வாறு ஆறு மாதத்தில் இடம்பெற முடியும்?

பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் கூறுவது உண்மைதான். ஆனால், ஆட்சியில் இருப்பவர்கள் அவ்வாறு செய்வார்கள் என்று எதிர்பார்ப்பது சரியானதா? இந்த விடயத்தில் நீண்ட அனுபவம் செல்வம் அடைக்கலநாதனுக்கு உண்டு அல்லவா?

இலங்கை தமிழ் அரசு கட்சி ஆரம்பிக்கப்பட்ட காலத்திலிருந்து, ஆட்சியிலிருந்த தென்னிலங்கை அரசாங்கங்கள் எப்போது தாங்களாக தமிழ் மக்களின் பிரச்னைகள் தொடர்பில் பேசியிருக்கின்றன? அவை கள் அவ்வாறு பெருந்தன்மையுடன் - தாராள மனதுடன் அரசியலை முன்னெடுத்திருந்தால் தமிழ் கட்சிகளுக்கான தேவையும் இருந்தி ருக்காதே!

தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் பயன்படுத்தும் சொற்கள் முன்னையவர்களின் சொற்களிலிருந்து வேறுபட்டிருந்தாலும்கூட, சில விடயங்களில் அடிப்படையான மாற்றங்களை ஏற்படுத்தும் ஓர் அரசாங்கமாக அவர்கள் இருப்பதற்கான வாய்ப்பில்லை. ஒருவேளை உள்ளூராட்சி தேர்தலில் அவர்கள் எதிர்பார்க்கும் வெற்றி கிட்டாது விட்டால் அவர்களின் அரசியல் அணுகுமுறைகளிலும் மாற்றங்கள் ஏற்பட வாய்ப்பு உண்டு. ஏனெனில், தென்னிலங்கையின் கட்சியொன்று ஓர் எல்லைக்கு மேல் அரசியலில் நெகிழ்வுத் தன்மையை பிரதிபலிப்பதற்கான வாய்ப்பில்லை.

இந்த விடயத்தில் நல்லாட்சி அரசாங்கம் என்று அழைக்கப்பட்ட ரணில் - மைத்திரி அரசாங்கம் இதற்கான ஆகச்சிறந்த உதாரணமாகும். அந்த அரசாங்கத்தின் ஆட்சியின்போது செல்வம் அடைக்கலநாதன் குழுக்களின் பிரதித் தலைவராக இருந்தவர். சம்பந்தன் எதிர்க்கட்சித் தலைவராக நியமிக்கப்பட்ட சூழலில், ஒரு மேலதிக சலுகையாக குழுக்களின் பிரதித் தலைவர் பொறுப்பு கூட்டமைப்பின் பிறிதொரு கட்சிக்கு வழங்கப்பட்டது.

அந்த நல்லாட்சி அரசாங்கம் என்பது தமிழ் மக்களின் ஆதரவுடன் தான் அதிகாரத்தைக் கைப்பற்றியிருந்தது. மைத்திரிபாலவின் வெற்றியில் தமிழ் மக்களின் வாக்குகள் தீர்க்கமான பங்கை வகித்திருந்தன. ஆனால், மைத்திரி பின்னர் எவ்வாறு நடந்து கொண்டார்? ஒப்பீட்டடிப்படையில் ராஜபக்ஷ அரசாங்கம் போலல்லாது உயிரச்சம் இல்லாத சூழலை தமிழ் மக்கள் அனுபவித்தனர். ஆனால், அடிப்படையான அரசியல் விடயங்களில் எவ்வித மாற்றங்களும் ஏற்படவில்லை. இந்த நிலையில், தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் அடிப்படையான மாற்றங்களை ஏற்படுத்துமென்று எவ்வாறு எதிர்பார்க்க முடியும்?

தமிழ் கட்சிகள் தங்களின் ஆற்றலை அறிந்து - அதன் அடிப்படையில் முதலில் ஒன்றுபட வேண்டும். அரசியலை யதார்த்தபூர்வமாக அணுகுவதில் உடன்பாடு காணவேண்டும். அரசாங்கத்தின்மீது சில அழுத்தங்களை பிரயோகிக்கக் கூடியளவுக்கு உள்ளக - வெளியக அரசியல் சூழலிலுள்ள சாதகமான விடயங்களை அடையாளம் கண்டு, அதற்கேற்ப தங்களை பலப்படுத்திக் கொள்ள வேண்டும். அவ்வாறானதொரு பின்னணியில்தான் அரசாங்கத்திடமிருந்து சில விடயங்களை எதிர்பார்க்க முடியும். மயிலே... மயிலே... இறகு போடு... என்றால் அரசியலில் அவ்வாறு நிகழாது.

# யாழ். பல்கலைக்கழக பொன்விழாவில் ‘பொற்கலை’ பொன்விழா மலர் வெளியீடு



யாழ்ப்பாண பல்கலைக் கழக ஐம்பதாம் அகவை பூர்த்தி பொன்விழா ஆண்டெனப் பொலிந்து நிற்கிறது. இம்மாதம் 26, 27, 28ஆம் திகதிகளில் இப் பொன்விழா வைபவங்கள் பல்கலைக்கழக வளாகத்தில் சிறப்புற நிகழ்கின்றன.

யாழ். பல்கலைக்கழக பழைய மாணவர் சங்கத்தின் தலைவராக ஆர்னோல்டும், பௌனந்தி செயலாளராகவும் பொறுப்பேற்று, பொன் விழா சங்கம் உருவானது. பொன்விழாவை விமரிசையாகக் கொண்டாடுவதென்று தீர்மானித்த விழா குழுவினர், பல்கலைக்கழக வளாகத்தில் மூன்று நாட்கள் தொடர்ந்து விமரிசையாக நடத்துவதென்றும், ஓய்வு பெற்ற கல்விப் பேராசான்களையும் கல்விசாரா ஆளுமைகளையும் கௌரவிப்பதென்றும், வசதி குன்றிய பல்கலைக்கழக மாணவர்களுக்கு நிதி உதவி நல்குவதென்றும், ஆவண பதிவாய் பொன் விழா மலரொன்றை ஆக்குவதென்றும், உயிர் காக்கும் முயற்சியாய் குருதிக்கொடை வழங்குவதென்றும் தீர்மானித்துச் செயலில் இறங்கினர்.

இப் பெரும் விழாவை செம்மையாக நடத்துதற்கு ஆதாரமான நிதி ஈட்டத்தில் விழாக் குழுவினர் தீவிரமாகச் செயல்பட்டனர். வெளிநாடுகளில் வாழும் பழைய மாணவர்கள், நல்லுள்ளம் கொண்ட செல்வந்தர்கள், ஈழத்திலுள்ள பழைய மாணவர்கள், நண்பர்கள் ஆகியோரிடமிருந்து நிதி சேர்ப்பதென்று வேலைகள் ஆரம்பமாகின.

மலேசியாவில் வாழும் பேராசிரியர் பாலசிங்கம் பாலச்சந்திரன் இந்த நிதி சேகரிப்புக்கு அச்சாணியாய் அமைந்து செயல்பட்டார். ஓய்வுநிலைப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் அ. அகிலதாஸ் உடனின்று உழைத்தார்.

வசதியற்ற மாணவர்களுக்கான நிதி சேகரிப்புக்கு ஒரு கோடி ரூபாய் திரட்டுவது என்னும் இலக்கை வெகு விரைவில் அடைந்துவிட்டோம். பின்னர் அது ஒன்றரை கோடி என்று உயர்ந்து, அந்த இலக்கையும் தாண்டி, இரண்டு கோடி ரூபாய் திரட்டும் திட்டத்தில் விழாக்குழுவினர் வெற்றிகரமாக முன்னேறி வருகின்றனர்.

பொன்விழா மலரை வெளியிடும் பொறுப்பை 1978ஆம் ஆண்டு உள்நுழை கலைப்பீட மாணவர் ஏற்றனர். அ. அகிலதாஸ் (தலைவர்), அருணகிரிநாதன் (செயலாளர்), தயானந்தராஜா, சேதுராஜா, செல்வி மு. இரட்ணபூபதி, திருமதி வி. குககுமாரி, திருமதி செ. பிறேமா, பேராசிரியர் புஷ்பரட்ணம், பேராசிரியர் பா. பாலச்சந்திரன், குலசபாநாதன், அருட்தந்தை ஜெரோம், ச. மார்க்கண்டு ஆகியோரை மலர்க் குழுவாகக் கொண்டு, மலர் உருவானது. லண்டனிலிருந்து மு. நித்தியானந்தன் ஆலோசகராய் அமைவதை ஏற்றார்.

**ச. மார்க்கண்டு**
(மலர் ஆசிரியர்)

பொன்விழாவிலுள்ள ’பொன்’ என்பதையும், கலைப்பீடம் என்பதில் உள்ள ‘கலை’ என்பதனையும் இணைத்து ‘பொற்கலை’ என்ற மகுடம் தாங்கி மலர் வெளியாகிறது.

கல்விப்புலம் சார்ந்த அறிஞர்களின் ஆக்கங்களைக் கொண்டு ‘பொற்கலை’ என்ற பொன்விழா மலர் அரிய பொக்கிஷமாகத் திகழ்கிறது. வளாகத்தின் கைலாசபதி கலையரங்கில் முதல் நாள் நிகழ்வில் இம்மலர் 550 பக்கங்களில், ரூபா 2500 விலையிடப்பட்டு வெளியிட்டு வைக்கப்படுகிறது.

மலர் வெளியீட்டை தொடர்ந்து, பல்கலைப் பணிகளில் உழைத்தோருக்கு கௌரவிப்பு நிகழ்வும் கலைக்கோலங்களும் இடம் பெறவுள்ளன.

லண்டன், கனடா, மலேசியா போன்ற நாடுகளிலிருந்து பழைய மாணவர்கள் யாழ்ப்பாணத்தில் திரள்கிறார்கள். தாங்கள் கற்ற கல்வித் தாயின் மண்ணில் , நீண்ட நாள்களுக்கு பின் தம் பழைய நண்பர்களைக் காணவும், கலந்துரையாடி மகிழவும், தங்கள் வளாகத்திற்கு என்னென்ன வழிகளில் உதவலாம் என்று கூடி ஆராயவும் பழைய மாணவர் அணி திரளும் பொன் நாளாக இந்தப் பொன்விழா அமையவிருக்கிறது.

## அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏப்ரல் - 24 வியாழக்கிழமை
விசுவாவசு வருடம் - சித்திரை 11
நல்ல நேரம் : 10.30 - 12.00
ராகு காலம் : 01.30 - 03.00
திதி : துவாதசி




**மேடம்**
தவறு செய்பவர்களை தட்டிக் கேட்பீர்கள். விரும்பிய பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள். வியாபாரத்தில் வாடிக்கையாளர்களின் எண்ணிக்கை அதிகரிக்கும். உத்தியோகத்தில் உங்கள் கை ஓங்கும்.

**இடபம்**
சொன்ன சொல்லைக் காப்பாற்றுவீர்கள். உங்களிடம் பழகும் நண்பர்கள் உறவினர்களின் பலம் பலவீனத்தை உணர்வீர்கள். மூத்த அதிகாரிகள் முக்கிய அறிவுரைத் தருவார்கள்.

**மிதுனம்**
கடந்த இரண்டு நாட்களாக இருந்த சோர்வு நீங்கி உற்சாகத்துடன் செயல்படுவீர்கள். வியாபாரத்தில் சூட்சுமங்களை உணருவீர்கள். மேலதிகாரிகளின் உதவி கிடைக்கும். புதிய மாற்றம் ஏற்படும் நாள்.

**கடகம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் அடுக்கடுக்கான வேலைகளால் அவதிக்கு உள்ளாவீர்கள். உத்தியோகத்தில் சின்ன சின்ன இடர்பாடுகளை சமாளிக்க வேண்டி இருக்கும். பொறுமை தேவைப்படும் நாள்.

**சிம்மம்**
கடினமான வேலைகளையும் மாறுபட்ட அணுகுமுறையால் முடித்துக் காட்டுவீர்கள். வியாபாரத்தில் புது ஒப்பந்தங்களால் லாபம் பெருகும். தந்திரங்களை கற்றுக் கொள்வீர்கள்.

**கன்னி**
பணப்புழக்கம் அதிகரிக்கும். அதிகாரப் பதவியில் இருப்பவர்கள் அறிமுகமாவார்கள். வியாபாரத்தில் பற்று வரவு உயரும். உங்கள் உழைப்பிற்கு பாராட்டு கிடைக்கும். அமோகமான நாள்.

**துலாம்**
குடும்ப வருமானத்தை உயர்த்த புது முயற்சிகளை மேற்கொள்வீர்கள். வியாபாரத்தில் புதிய வாடிக்கையாளர்கள் தேடி வருவார்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்கள் உதவுவார்கள். கனவு நனவாகும்.

**விருட்சிகம்**
நீண்ட நாட்களாக பார்க்க நினைத்த ஒருவரை சந்திப்பீர்கள். தாயாருடன் கருத்து மோதல்கள் வந்து நீங்கும். வியாபாரத்தில் அதிரடியான செயல்களால் போட்டிகளை சமாளிப்பீர்கள். உழைப்பால் உயரும்.

**தனுசு**
குடும்பத்தினருடன் கலந்தாலோசித்து பழைய பிரச்னைகளுக்கு முக்கிய தீர்வு காண்பீர்கள். வியாபாரத்தில் பழைய சரக்குகள் விற்றுத் தீரும். உத்தியோகத்தில் உங்கள் கருத்துக்கு ஆதரவு பெருகும்.

**மகரம்**
கடந்த இரண்டு நாட்களாக கணவன்-மனைவிக்குள் இருந்த மனக்கசப்புகள் நீங்கும். எதிர்பார்த்த உதவிகள் தக்க சமயத்தில் கிடைக்கும். வியாபாரத்தில் புது முதலீடு செய்வீர்கள். புத்துணர்ச்சி பெருகும்.

**கும்பம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் மனதில் இனம்புரியாத பயம் வந்து போகும். வியாபாரத்தில் எதிர்பார்த்த பணம் தாமதமாக வரும். உத்தியோகத்தில் அதிகாரிகள் பகைத்து கொள்ள வேண்டாம்.

**மீனம்**
எளிதில் முடித்துவிடலாம் என நினைத்த காரியங்கள் கூட இழுபறியில் போய் முடியும். வியாபாரத்தில் அவசர முடிவுகள் வேண்டாம். உத்தியோகத்தில் சக ஊழியர்களால் சங்கடங்கள் வரும்.

# காலச் சூழலுக்கு ஏற்ப பயணிக்கும் தமிழ் தேசிய பேரவைக்கே ஆதரவு!

## யாழ். முஸ்லிம் மக்கள் ஒன்றியம் அறிவிப்பு

யாழ்ப்பாணம், ஏப். 24

தேசிய மக்கள் சக்தியின் பொறிக்குள் வீழாது காலச் சூழலுக்கு ஏற்ப தமிழ் தேசியப் பரப்பில் பயணிக்கும் கட்சிகளுடன் ஒன்றிணைந்து பயணிக்கும் நோக்கில் இம்முறை நடைபெறவுள்ள உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் தமிழ் தேசியப் பேரவைக்கு ஆதரவை வழங்கவுள்ளதாக யாழ்.முஸ்லிம் மக்கள் ஒன்றியம் தலைவர் அப்துல் பரீக் ஆரீப் தெரிவித்துள்ளர்.

நடைபெறவுள்ள உள்ளூராட்சி தேர்தலில் கஜேந்திரகுமார் தலைமையிலான தமிழ்த் தேசிய மக்கள் பேரவைக்கு ஆதரவு வழங்கும் அறிவிப்பை விடுத்திருந்த யாழ்.முஸ்லிம் மக்கள் ஒன்றியம் அது தொடர்பில்




ஊடக சந்திப்பொன்றை நேற்று நடத்தியது.

அதில் அவர் மேலும் தெரிவிக்கையில்-

அகில இலங்கை தமிழ் காங்கிரஸுடன் யாழ் முஸ்லிம் மக்களுக்கு நெருங்கிய தொடர்பும் நட்பும் இருந்து வருகின்றது.

அதுமட்டுமல்லாது கொள்கையில் தடுமாறா நிலையுடன் பயணிக்கும் கஜேந்திரகுமார் தலைமையிலான கட்சி எமது மக்களின் நலன்களில் அதிக அக்கறையுடன் பயணித்து வருகின்றது.

இவ்வாறான நிலையில் காலத்தின் சூழ்நிலைக்கேற்ப கொள்கையுடன் தமிழ் தேசியப் பேரவை இருக்கின்றது.

அதனடிப்படையில் இம்முறை நடைபெறும் உள்ளூராட்சித் தேர்தலில் எமது அமைப்பின் ஆதரவை தமிழ் தேசிய பேரவைக்கு வழங்குவதற்கு தாம் தீர்மானித்துள்ளோம். முஸ்லிம் மக்கள் ஓரணியில் திரண்டு ஆதரவை வழங்கவேண்டும்-என்றார். (அ-05)

# சங்கானை பிரதேச வைத்தியசாலை வீதி ஊடாக ஆரம்பமான பஸ் சேவை!

யாழ்ப்பாணம், ஏப். 24

சங்கானை பிரதேச வைத்தியசாலை வீதி ஊடாக பஸ் சேவை நேற்று காலை 9 மணிமுதல் சம்பிரதாயபூர்வமாக நாடா வெட்டி ஆரம்பித்து வைக்கப்பட்டடது.

கடந்த சங்கானை பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் இது குறித்து 788 வழித்தட சங்க பஸ் உரிமையாளர்களிடம், சங்கானை பிரதேச வைத்தியசாலைக்கு வருகை தரும் நோயாளிகளின் நலன் கருதி வைத்தியசாலை வீதி ஊடாக பஸ் சேவைகளை முன்னெடுக்குமாறு வைத்தியசாலை நோயாளர் நலன்புரி சங்கத்தினால் கோரிக்கை முன்வைக்கப்பட்டது.

இந்நிலையில் நேற்று முதல் கீரிமலை இளவாலை, தொட்டிலடி, மானிப்பாய், யாழ்ப்பாணம் வரை சேவையில் ஈடுபடும் 788 வழித்தட தனியார் பஸ் சேவையிலுள்ள மூன்று பஸ்கள் தமது சேவையை குறித்த வைத்தியசாலை வீதி ஊடாக மேற்கொள்ளவுள்ளன.



இதன் மூலம் சங்கானை பிரதேச வைத்தியசாலைக்கு செல்லும் பல தரப்பினரும் நன்மைகளை பெற்று கொள்ள கூடியதாக இருக்கும் என பொது மக்கள் தெரிவித்தனர்.

இந்நிகழ்வில் சங்கானை வைத்தியசாலை நலன்புரி சங்கத்தினர், யாழ் மாவட்ட கூட்டிணைக்கபட்ட தனியார் பஸ் கம்பனிகளின் சங்கத்தின் தலைவர் கெங்காதரன், இளவாலை சிற்றூர்தி சங்கத் தலைவர், சங்கானை பிரதேச செயலர், மானிப்பாய் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி, வைத்தியசாலை மருத்துவர், பொதுமக்கள் என பலரும் கலந்து கொண்டனர். (அ)

# 2 இளைஞர்கள் ஹெரோயினுடன் கைது!

யாழ்ப்பாணம், ஏப். 24

அராலி வீதி, பொம்மைவெளி பகுதியில் இரண்டு இளைஞர்கள் ஹெரோயினுடன் கைது செய்யப்பட்டனர். இதன்போது அவர்களிடமிருந்து 620 மில்லிகிராம் ஹெரோயின் மீட்கப்பட்டது.

யாழ்ப்பாணம் மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரின் கீழ் இயங்கும் பொலிஸ் புலனாய்வு பிரிவினருக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில், யாழ்ப்பாணம் பொலிஸ் போதைப்பொருள் தடுப்பு பொலிஸாரால் இந்த கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

கைது செய்யப்பட்ட இரண்டு சந்தேகநபர்களும் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டு விசாரணைகளுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர். விசாரணைகளின் பின்னர் அவர்களை நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (அ-05)

# 30 போத்தல் கசிப்புடன் ஒருவர் கைது!

வவுனியா, ஏப். 24

வவுனியா வாரிக்குட்டியூர் பகுதியில் 30 போத்தல் கசிப்புடன் ஒருவரை கைது செய்துள்ளதாக பூவரசங்குளம் பொலிசார் தெரிவித்தனர்.

குறித்த பகுதியில் கசிப்பு விற்பனை செய்யப்பட்டு வருவதாக பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற தகவலுக்கமைய நேற்று முன்தினம் இரவு வீடொன்றைச் சோதனை செய்த பொலிஸார் அங்கு மறைத்துவைக்கப்பட்டிருந்த 30 போத்தல் கசிப்பைக் கைப்பற்றினர்.

அதனை உடைமையில் வைத்திருந்தார் என்ற சந்தேகத்தின் அடிப்படையில் 48 வயதுடைய நபர் ஒருவரை பொலிஸார் கைது செய்தனர். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமது கட்சியினரை மாத்திரம் பாதுகாக்க விழைகிறதா அரசு?

## சரித்த ஹேரத் கேள்வி

கொழும்பு, ஏப். 24

**அரசாங்கம் தம்முடைய கட்சியினரை மாத்திரம் பாதுகாக்க விழைகின்றதோ என்ற சந்தேகம் எழுந்துள்ளதாக முன்னாள் பாராளுமன்ற சரித்த ஹேரத் தெரிவித்துள்ளார்.**

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் இதனை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இனந்தெரியாத நபர்களால் முன்னெடுக்கப்படும் துப்பாக்கிப்பியோக சம்பவங்கள் நாட்டில் அதிகரித்து வருகின்றது. நேற்று (நேற்று முன் தினம்) இரவு சமூக செயற்பாட்டாளர் டான் பிரியசாத் மீது துப்பாக்கிப்பிரயோகம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

நாமும் கூட அவருடைய அரசியல் கொள்கைகளை ஏற்றுக்கொள்ளவில்லை.மாறாக எந்த அரசியல் கொள்கையை கொண்டவராக இருப்பினும் அவருடைய பாதுகாப்பை உறுதிப்படுத்த வேண்டியது அரசாங்கத்தின் கடமையாகும்.

அரசாங்கம் தம்முடைய கட்சியினரை மாத்திரம் பாதுகாக்க விளைகின்றதோ என்ற



சந்தேகம் எழுந்துள்ளது. ஜனநாயக நாட்டில் சட்டவிரோதமாக ஆயுதங்களை வைத்திருக்கும் அனுமதி அரச இயந்திரத்திற்கு மாத்தரமே வழங்கப்பட்டுள்ளது. ஆகவே நிராயுதபாணியாகவுள்ள ஏனையதரப்பினரை பாதுகாக்கும் பொறுப்பு அரசாங்கத்திற்கு உள்ளது-என்றார்.

(அ)

# கொழும்பு துறைமுகத்துக்கு வந்த தென் கொரிய கடற்படைக் கப்பல்

கொழும்பு, ஏப். 24

தென் கொரிய கடற்படைக்குச் சொந்தமான கப்பலொன்று உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டு கொழும்பு துறைமுகத்தை வந்தடைந்தது.

நேற்று முன்தினம் வருகை தந்த குறித்த கப்பலைக் கடற்படை மரபுகளின் படி இலங்கை கடற்படையினர் வரவேற்றனர்.

149.5 மீற்றர் நீளம் கொண்ட இந்தக் கப்பல், 262 பணியாளர்களைக் கொண்டுள்ளது.

கப்பலில் வருகை தந்தவர்கள் நாட்டின் சுற்றுலா தளங்களைப் பார்வையிடவுள்ளதுடன் இன்று குறித்த கப்பல் நாட்டிலிருந்து புறப்படவுள்ளது. (அ)

# தேசபந்து பதவிநீக்கம் விசாரிக்க மூவர் குழு

கொழும்பு, ஏப். 24

இடைநீக்கம் செய்யப்பட்ட பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோனை பதவிநீக்கம் செய்வது தொடர்பிலான விசாரணைகளுக்காக மூவர் கொண்ட குழு நியமிக்கப்பட்டுள்ளது.

உயர் நீதிமன்ற நீதியரசர் ப்ரீதி பத்மன் சூரசேன தலைமையில் இந்த குழு நியமிக்கப்பட்டுள்ளது.

நீதியரசர் நீல் இத்தவெல மற்றும் தேசிய பொலிஸ் ஆணைக்குழுத் தலைவர் லலித் ஏக்கநாயக்க ஆகியோர் இந்த குழுவின் ஏனைய உறுப்பினர்கள் ஆவர்.

# நிமேஷின் சடலம் தோண்டி எடுப்பு!

கொழும்பு, ஏப். 24

வெலிக்கடை பொலிஸ் காவலில் இருந்தபோது இறந்ததாகக் கூறப்படும் மீகஹகிவுலவைச் சேர்ந்த 25 வயதான நிமேஷ் சத்சரவின் உடல், அடக்கம் செய்யப்பட்டு 21 நாட்களுக்குப் பின்னர் நேற்றுக் காலை தோண்டி எடுக்கப்பட்டது.

பதுளை நீதவான் நுஜித் டி சில்வா முன்னிலையில் குறித்த இளைஞனின் சடலம் தோண்டி எடுக்கப்பட்டது.

கொழும்பு பிரதான சட்ட வைத்திய அதிகாரி அலுவலகத்தின் தடயவியல் வைத்திய அதிகாரிகள், கராப்பிட்டிய மற்றும் ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகங்களின் தடயவியல் வைத்திய அதிகாரிகள் குழு, பதுளை பொலிஸ் குற்றவியல் பிரிவு மற்றும் கந்தகெட்டிய பொலிஸ் அதிகாரிகளும் இதன்போது அங்கு இருந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நிமேஷின் தாயார் அளித்த முறைப்பாட்டின் பேரில் கடந்த 9 ஆம் திகதி கொழும்பு நீதவான் நீதிமன்றத்தில் நடைபெற்ற வழக்கில் வழங்கப்பட்ட உத்தரவின் பேரில் சடலம் தோண்டி எடுக்கப்பட்டது.

கடந்த ஏப்ரல் மாதம் முதலாம் திகதி வெலிக்கடை பொலிஸாரால் கைது செய்யப்பட்ட பின்னர், தமது மகன், பொலிஸ் காவலில் இருந்தபோது சித்திரவதைக்கு உள்ளாகி இறந்துவிட்டதாகக் தாயார் வழங்கிய முறைப்பாட்டுக்கு அமைய இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

மூன்று பேர் கொண்ட வைத்திய நிபுணர் குழுவைக் கொண்ட விசேட குழுவால் மீண்டும் பிரேத பரிசோதனையை மேற்கொள்ளுமாறு கொழும்பு மேலதிக நீதவான் கெமிந்த பெரேரா, பிறப்பித்த உத்தரவுக்கு அமைய கடந்த 09 ஆம் திகதி மாலை உயிரிழந்த நிமேஷின் கல்லறைக்கு கந்தகெட்டிய பொலிஸாரால் பாதுகாப்பு வழங்கப்பட்டிருந்தது.

அதன்படி, நேற்று தோண்டிய எடுக்கப்பட்ட நிமேஷின் உடல், கொழும்பு பிரதான சட்டவைத்திய அதிகாரி அலுவலகத்துக்கு கொண்டு செல்லப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

(அ)

# வெளிநாட்டு முதலீடுகளை பாதுகாக்க உரிய சட்ட ஏற்பாடுகள் செய்யப்படும்!

## ஜனாதிபதி அநுரகுமார உறுதி

கொழும்பு, ஏப். 24

எரிசக்தி, சுற்றுலா, வெளிநாட்டு முதலீடு மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு ஆகிய துறைகளில் இலங்கைக்கு முன்னுரிமை அளிக்கப்படும் என ஐக்கிய அரபு இராச்சியத்தின் துணைப் பிரதமரும் வெளியுறவு அமைச்சருமான ஷேக் அப்துல்லா பின் சயீட் அல் நஹியான் தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டுள்ள அவர் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவை சந்தித்து கலந்துரையாடிய போதே இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இந்த சந்திப்பின்போது கருத்து தெரிவித்த ஜனாதிபதி, இலங்கையில் முதலீட்டுக் உகந்த சூழல் உருவாகியிருப்பதாகக் குறிப்பிட்டார்.

கடந்த காலங்களைப் போன்று முதலீடுகளை வலுவிழக்கச் செய்



யும் நிலைமை ஏற்பட மீண்டும் இடமளிக்கப்படாது என்றும், முதலீடுகளைப் பாதுகாப்பதற்கான சட்ட ஏற்பாடுகள் செய்யப்படும் என்றும் ஜனாதிபதி வலியுறுத்தினார்.

இலங்கைக்கும் ஐக்கிய அரபு இராச்சியத்துக்கும் இடையிலான, நீண்ட கால இருதரப்பு உறவுகளை மேலும் பலப்படுத்தி, மேம்படுத்துவதையும், இரு நாடுகளும் பொருளாதார நன்மைகளை ஈட்டிக்கொள்ள வேண்டும் என்பதையும் நோக்காகக் கொண்டு, ஐக்கிய அரபு இராச்சியத்தின் துணைப் பிரதமரும் அவரது குழுவினரும் இலங்கைக்கு வருகை தந்துள்ளனர்.

(அ)

# இந்த ஆண்டு இதுவரை 37 துப்பாக்கிச் சூடுகள்!

## 26 பேர் உயிரிழப்பு

கொழும்பு, ஏப். 24

இந்த ஆண்டு ஜனவரி 1 ஆம் திகதி முதல் நேற்று (22) வரையிலான காலப்பகுதியில் நாடு முழுவதும் 37 துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்கள் பதிவாகியுள்ளன.

துப்பாக்கிச் சூட்டில் 26 பேர் உயிரிழந்ததாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இந்த 37 துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்களில் 23 சம்பவங்கள் ஒழுங்கமைக்கப்பட்ட குற்றக் கும்பல்களால் நடத்தப்பட்டவை எனத் தெரியவந்துள்ளது.

தனிப்பட்ட பிரச்னைகள் காரணமாக மீதமுள்ள 14 துப்பாக்கிச்சூட்டு சம்பவங்களும் பதிவாகியுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். (அ)

# தேர்தல் சட்ட மீறல்கள் 2,298 முறைப்பாடுகள்




கொழும்பு, ஏப். 24

உள்ளூட்சி மன்றத் தேர்தல் தொடர்பில் மார்ச் மாதம் 20 ஆம் திகதி முதல் நேற்று முன் தினம் வரையான காலப்பகுதியில் 2,298 முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாக தேர்தல் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

அதன்படி, வன்முறைச் சம்பவங்கள் தொடர்பில் 11 முறைப்பாடுகளும் தேர்தல் சட்டங்களை மீறியமை தொடர்பில் 2,116 முறைப்பாடுகளும் ஏனைய விடங்கள் தொடர்பில் 171 முறைப்பாடுகளும் கிடைத்துள்ளதாக தேர்தல் ஆணைக்குழு மேலும் தெரிவித்துள்ளது.

(அ)

# ஈஸ்டர் தாக்குதல்கள் அறிக்கையை ஆராயும் குழுவில் ஷானி அபேசேகர

கொழும்பு, ஏப். 24

உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் தொடர்பான ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் அறிக்கையை ஆராய்ந்து விசாரணைகளை முன்னெடுக்கும் குழுவில் ஐந்தாவது நபராக சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஷானி அபேசேகர நியமிக்கப் பட்டுள்ளார்.

இந்த நியமனம் பதில் பொலிஸ்மா அதிபர் பிரியந்த வீரசூரியவால் வழங்கப்பட்டுள்ளது.

அதன்படி, சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபர் அசங்க கரவிட்ட தலைமையிலான நான்கு பேர் கொண்ட குழு, விசாரணை அறிக்கையை ஆய்வு செய்ய ஐந்து உறுப்பினர்களாக [illegible] (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கருணா, பிள்ளையானுக்கு அரசியலில் பதவிகள் வழங்கப்பட்டமை தவறானது!

## முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால

கொழும்பு, ஏப். 24

**" புலிகள் அமைப்பில் இருந்தபோது குற்றம் இழைத்த கருணா, பிள்ளையான் போன்றவர்களுக்கு அரசியலில் பதவிகள் வழங்கப்பட்டமை தவறான முடிவாகும்." _ என்று முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.**



தனியார் ஊடகமொன்றுக்கு வழங்கிய நேர்காணலின்போதே அவர் இதனை குறிப்பிட்டார்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சம்பவத்துடன் பிள்ளையானை தொடர்புபடுத்துவதற்கு முற்படுகின்றனர் என வெளியாகும் தகவல் தொடர்பில் நீங்கள் என்ன நினைக்கின்றீர்கள் என எழுப்பப்பட்ட கேள்விக்கு பதிலளித்த மைத்திரிபால சிறிசேன கூறியவை வருமாறு-

அது பற்றி எனக்கு எதுவும் கூறமுடியாது. விசாரணைகளை முன்னெடுக்கும் சி.ஐ.டியினர் மற்றும் புலனாய்வு பிரிவுக்கே அது பற்றி தெரிந்திருக்கக்கூடும். எனக்கு இது பற்றி தகவல்கள் தெரியவரவில்லை.

பிள்ளையான் புலிகள் அமைப்பில் இருந்தவர். அவ்வமைப்பில் இருந்து அவர் வெளியேறி அரசாங்கத்துடன் இணைந்தபோது நான் அமைச்சு பதவி வழங்கவில்லை. அப்படிப்பட்ட ஒருவருக்கு எப் படி பதவி வழங்கப்பட்டது என வழங்கியவரிடம் கேளுங்கள்.

அவ்வாறு பதவி வழங்கப்பட்டமை தவறாகும்.

புலிகள் அமைப்பில் இருந்து வெளியேறி கருணாவும், பிள்ளையானும் இராணுவத்துடன் இணைந்தனர். போரை முடிப்பதற்கு இது உதவியாக அமைந்திருக்கக்கூடும்.

அம்பாறையில் பிக்குகளை கொலை செய்தது யார்? இது அனைவருக்கும் தெரியும். எனவே, நபர்கள் யார் என்ற தகவலை எனது வாயில் இருந்து எடுக்க முற்படவேண்டும். புலிகள் அமைப்பில் இருந்தபோது கருணா, பிள்ளையான் மக்களை கொன்று குற்றம் இழைத்தனர் - என்றார். (அ)

# தலைக்கவசத்தால் தாக்கப்பட்டு 16 வயதுச் சிறுவன் உயிரிழப்பு!

கொழும்பு, ஏப். 24

வெலகெதர, ஹவன்பொல பகுதியில் தலைக்கவசத்தினால் தாக்குதலுக்குள்ளாகி, வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த 16 வயதுடைய பாடசாலை மாணவன் ஒருவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

கடந்த 16 ஆம் திகதி மேற்கொள்ளப்பட்ட இந்த தாக்குதலுக்கு மோட்டார் சைக்கிள் தலைக்கவசம் பயன்படுத்தப்பட்டதாக மாவதகம பொலிஸார் நடத்திய விசாரணைகள் தெரியவந்துள்ளது.

இந்த தாக்குதல் சம்பவம் தொடர்பாக நேற்று முன்தினம் அரேபொல பகுதியில் 11 சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்கள் அனைவரும் அரேபொல மற்றும் அம்பகோட்டை பகுதிகளைச் சேர்ந்த 15 முதல் 18 வயதுக்குட்பட்டவர்கள் என அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

தனிப்பட்ட தகராறு காரணமாக இந்தக் கொலை நடந்துள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

குற்றத்தில் தொடர்புடைய ஏனைய சந்தேக நபர்களை கைது செய்வதற்கான நடவடிக்கையினை மாவதகம மற்றும் வெலகெதர பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (அ)

# சூதாட்ட விடுதி சுற்றிவளைப்பு பெண்கள் உட்பட 17 பேர் கைது!

கொழும்பு, ஏப். 24

நீர்கொழும்பு, தெஹிமல்வத்தை பிரதேசத்தில் உள்ள வீடொன்றில் சட்டவிரோதமாக இயங்கி வந்த சூதாட்ட விடுதி ஒன்றிலிருந்து பெண்கள் உட்பட 17 பேர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பொலிஸாருக்குக் கிடைத்த தகவலின் பேரில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.10 ஆண்களும் 7 பெண்களுமே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட பெண்களில் சிலர் தங்களது கணவர் வேலைக்கு சென்ற பின்னர் அயல் வீட்டவர்களுடன் இணைந்து இந்த சூதாட்ட விடுதியை நடத்தி வந்துள்ளதாக பொலிஸாரின் விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

இதன்போது சூதாட்ட விடுதியிலிருந்து 4 இலட்சத்து 25 ஆயிரம் ரூபா பணமும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளது.

இந்த சூதாட்ட விடுதிக்கு வருகை தருபவர்கள் தங்களது நகை, பணம் மற்றும் வாகனங்களைப் பந்தயம் வைத்து சூதாட்டத்தில் ஈடுபட்டு வந்துள்ளதாகவும் பொலிஸாரின் விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

பந்தயம் வைத்து சூதாட்டத்தில் ஈடுபட்ட பலர் தங்களது நகை, பணம் மற்றும் வாகனங்களை இழந்து ஏமாந்துள்ளதாக பொலிஸாரின் விசாரணைகளில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# தீ பற்றியது ஓட்டோ

கொழும்பு, ஏப். 24

ஹற்றன் - கண்டி பிரதான வீதியில் பயணித்துக்கொண்டிருந்த ஓட்டோ ஒன்று திடீரென தீப்பற்றி எரிந்துள்ளதாக ஹற்றன் பொலிஸார் தெரிவித்த னர்.

இந்த தீ விபத்து நேற்று காலை இடம்பெற்றுள்ளது டன், ஹற்றனிலிருந்து கண்டி நோக்கிப் பயணித்த ஓட்டோ ஒன்றே தீப்பற்றி எரிந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

தீ விபத்தின் போது ஓட்டோவில் மூன்று பேர் பயணித்துள்ள நிலையில் அவர்களுக்கு எந்தவித காயங்களும் ஏற்படவில்லை எனவும், பிரதேசவாசிகள் மற்றும் பிரதான வீதியில் பயணித்த ஏனைய வாகனங்களின் சாரதிகள் இணைந்து தீ பரவலை கட்டுப்படுத்தியுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

தீ விபத்துக்கான காரணம் இதுவரை கண்டறியப்படவில்லை என ஹட்டன் பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

# மரம் முறிந்து வாகனங்கள் சேதம்

கொழும்பு, ஏப். 24

பொரளை மயான சுற்றுவட்டத்திற்கு அருகில் மரம் ஒன்று முறிந்து விழுந்ததில் 8 வாகனங்கள் சேதமடைந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குறித்த வீதியில் நேற்று காலை கடுமையான போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தநிலையில், கொழும்பு மாநகர சபையின் உடனடி நடவடிக்கையில் முறிந்து வீழ்ந்த மரம் அகற்றப்பட்டது. (அ)

# ஆயுதங்கள், இராணுவ சீருடையை ஒத்த ஆடைகளுடன் ஒருவர் கைது!

கொழும்பு, ஏப். 24

தம்பகல்ல பொலிஸ் பிரிவின் பஹலவத்த பகுதியில் வீடொன்றை பொலிஸார் சோதனையிட்டபோது, ஆயுதங்கள் மற்றும் இராணுவ சீருடையை ஒத்த ஆடைகளுடன் சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர் பஹலவத்த, தம்பகல்ல பகுதியைச் சேர்ந்த 60 வயதுடையவர் என தெரியவந்துள்ளது.

சந்தேகநபரிடமிருந்து கைக்குண்டு, 09 மி.மீ வகை 05 வெடிமருந்துகள், 25 ரி-56 வெடிமருந்துகள், , 01 எம்-16 வெடிமருந்துகள், 04 வெடிமருந்து பைகள் மற்றும் இராணுவ சீருடையை ஒத்த ஆடைகளை பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.குறித்த சம்பவம் தொடர்பில் தம்பகல்ல பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (அ)

# ஜே.வி.பி. மன்னிப்பு கேட்க வேண்டும்!

## ரணில் வலியுறுத்து

கொழும்பு, ஏப். 24

தலதா மாளிகைமீது தாக்குதல் நடத்தியதற்காக ஜே.வி.பியினர் மன்னிப்பு கோர வேண்டும் என்று முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வலியுறுத்தியுள்ளார்.

இது தொடர்பில்அவர்மேலும் கூறியவை வருமாறு-தலதா வழிபாடு முன்னெடுக்கப்பட்டுள்ளமை சிறந்த நடவ டிக்கை. அதற்காக அரசாங்கத்தை பாராட்டுகின்றோம். இதனை முதற்கட்ட நடவடிக்கையாக கருதுகின்றேன்.

அதேபோல 2 ஆம் கட்டமாக 1989 இல் தலதா மாளிகை மீது தாக்குதல் நடத்தியதற்காக மன்னிப்பு கோர வேண்டும். அப்போது அனைவரும் இணைந்து மேலும் பாராட்ட முடியும்.

அத்துடன், தேசிய மக்கள் சக்தி எம்.பிக்கள், தற்போது புத்தம் சரணம் கச்சாமி எனக் கூறுவதற்கு வகுப்பெடுத்துவரு கின்றனர். வெட்கப்படாமல் தற்போதாவது அது பற்றி படிப்பது பாராட்ட வேண்டிய விடயம்.

ஜய மங்கள கீதை இசைப்பதற்கும் பயிற்சி பெறு கின்றனர். இனி நாடாளுமன்றத்தில் நடைபெறும் நிகழ்வுக ளின்போது ஜய மங்கள கீதத்தை தேசிய மக்கள் சக்தி எம்.பிக்களே இசைக்கக்கூடும். அதன்மூலம் செலவுகளைக் கட்டுப்படுத்தலாம்.

அதேவேளை, சீனாவுக்கு அடுத்தப்படியாக பலம்பொருந்திய அரசாங்கம் எமது நாட்டில் தான் உள்ளதுபோலும். ட்ரம்புக்கு கடிதம் எழுதியவுடன் 90 நாட்கள் வரி விதிப்பு நிறுத்தி வைக்கப் பட்டுவிட்டதாம்-என்றார். (அ)

# டான் பிரியசாத்தின் கொலைக்கு அரசு பொறுப்புக்கூற வேண்டும்!

## சட்டத்தரணி மனோஜ் கமகே

கொழும்பு, ஏப். 24

அரசியல் செயற்பாட்டாளர் டான்பிரியன்சாத்தின் கொலைக்கு அரசாங்கம் பொறுப்புக்கூற வேண்டும் என முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் ஊடகப் பேச்சாளர் சட்டத்தரணிய மனோஜ் கமகே தெரிவித்துள்ளார். கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இதனைத்தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-தற்போதைய அரசியல் சூழ்நிலையில், நாட்டில் ஒரு நாளைக்கு ஒரு துப்பாக்கிப்பிரயோக சம்பவமேனும் இடம்பெறும் நிலையே காணப்படுகின்றது.

நாட்டில் சட்டத்தின் ஆட்சி வீழ்ச்சியடையும் போது, மக்கள் பல இடங்களில் கொடூரமாக கொலை செய்யப்படும் நிலை ஏற்படும்.அரசாங்கம் தனக்கு எதிரான கருத்தை கொண்ட தரப்பினர்களின் கொலைகளை பாதாளக்குழுக்கள் மேற்கொண்டதாக சித்திரிக்க முயல்கின்றது.

டான் பிரியசாத்தின் கொலை அரசாங்கத்திற்கு எதிரான கருத்துக்களை கொண்டவர்கள் அதிக அளவில் இலக்குகளாக மாறியுள்ளனனர் என்பதை பிரதிபலிக்கும் வகையில் அமைந்துள்ளது.அவரது தீவிர அரசியல் கருத்துக்கள், அரசியல் முரண்பாடுகள், அவரது மரணத்திற்கு காரணமாக இருந் தனவா என்ற சந்தேகமும் எழுந்துள்ளது. டான் பிரியசாத்தின் கொலையை பாதாளக்குழுவின் பக்கம் திசை திருப்ப முயல்கின்றனர். அரசாங்கம் அவருடைய கொலைக்கான பொறுப்பு

# தபால் வாக்காளர்களுக்கு ஈ - சேவை நடைமுறையில்!

கொழும்பு, ஏப். 24

தபால் வாக்காளர்கள் தங்கள் வாக்கை செலுத்தும் இடம் மற்றும் சான்றளிக்கும் அதிகாரியை அடையாளம் காண உதவும் வகையில் "ஈ" சேவை ஒன்று நடைமுறையில் இருப்பதாக தேர்தல் ஆணைக் குழு தெரிவித்துள்ளது.

இது தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களையும், அவர்களின் குழுக்கள் மற்றும் கட்சிகளையும், அவர்களின் சின்னங்களையும் அடையாளம் காண எளிதாக்கியுள்ளது என்று ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

eservices.electio ns.gov.lk என்ற இணைய முகவரியின் ஊடாக பிரவேசித்து தேர்தல் "ஈ" சேவையை அணுக முடியும் எனவும் அதில் அரச அதிகாரிகளுக்கான தபால் வாக்களிப்பு தகவல்களுக்கான இணைப்பை அணுகி தகவல்களை பெற்றுக் கொள்ளமுடியும். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வத்திக்கான் புறப்பட்டார் கர்தினால் மல்கம் ரஞ்சித்!

கொழும்பு, ஏப் 24

கொழும்பு பேராயர் கர்தினால் மெல்கம் ரஞ்சித் நேற்றுக் காலை வத்திக்கானுக்குப் புறப்பட்டுச் சென்றார்.

எதிர்வரும் சனிக்கிழமை நடைபெறும் போப் பிரான்சிஸின் இறுதிச் சடங்கில் கலந்து கொள்வதற்காக, கர்தினால் ரஞ்சித் காலை 9.30 மணிக்கு கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்திலிருந்து புறப்பட்டார் என தெரிவிக்கப்பட்டது.

கத்தோலிக்க திருச்சபையின் முதல் லத்தீன் அமெரிக்கத் தலைவரான பாப்பரசர் பிரான்சிஸ், ஐந்து வாரங்களாக இரட்டை நிமோனியாவுடன் போராடி வைத்தியசாலையில் இருந்து வெளியேறி ஒரு மாதத்திற்குள் திங்கட்கிழமை தனது 88ஆவது வயதில் காலமானார்.

பெரும் கூட்டத்தை ஈர்க்கும் என்று எதிர்பார்க்கப்படும் அவரது இறுதிச் சடங்கு, சனிக்கிழமை காலை 10.00 மணிக்கு வத்திக்கானில் உள்ள சென். பீற்றர்ஸ் பசிலிக்காவுக்கு முன்னால் உள்ள சதுக்கத்தில் நடைபெறும். (அ)

# அடுத்த நான்கு மாதங்களுக்கு போதுமான இன்சுலின் உள்ளது!

கொழும்பு, ஏப். 24

அடுத்த நான்கு மாதங்களுக்கு தேவையான இன்சுலின் இருப்பு ஏற்கனவே விநியோகிக்கப்பட்டுள்ளதாகவும், இது தொடர்பாக பொதுமக்கள் அச்சமடையத் தேவையில்லை எனவும், அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

இந்த ஆண்டு செப்ரெம்பர் மாதம் வரை நாட்டில் தேவையான அளவு இன்சுலின் இருப்பு உள்ளதாகத் தெரிவித்த அமைச்சர், மருந்து தட்டுப்பாடு ஏற்படாமல் இருக்க நான்கு முதல் ஆறு மாதங்களுக்கு தேவையான மருந்து இருப்பை பராமரிக்க அரசு நடவடிக்கை எடுத்து வருவதாகவும் தெரிவித்தார்.

மேலும் கடந்த இரண்டு ஆண்டுகளில் பல்வேறு காரணங்களால் சில மருந்துகளுக்கு அவ்வப்போது தட்டுப்பாடு ஏற்பட்டதாகவும், விநியோகஸ்தர்களின் பலவீனங்கள் இதற்கு ஒரு காரணமாக இருந்ததாகவும் அமைச்சர் கூறினார். இதை தவிர்க்க, பல நாடுகளுடன் பேச்சுவார்த்தைகள் நடத்தப்பட்டு வருவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (அ)

# நாட்டின் தேசிய பாதுகாப்பு குறித்து அரசு கவனம் செலுத்தவேண்டும்!

## சீலரத்ன தேரர் வேண்டுகோள்

கொழும்பு, ஏப். 24

நாட்டின் தேசிய பாதுகாப்பு குறித்து அரசாங்கம் அவதானம் செலுத்த வேண்டும் என ஜன செத பெரமுன கட்சியின் தலைவர் பத்தரமுல்ல சீலரத்ன தேரர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

கொழும்பில் நேற்று இடம் பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இந்த வேண்டுகோளை முன்வைத்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-நாட்டில் பல்வேறு பகுதிகளில் கொலை மிரட்டல்களும் துப்பாக்கிப் பிரயோக சம்பவங்களும் இடம்பெற்று வருகின்றன.

ஜனாதிபதிக்கு இவை பற்றி தெரியாமல் இருக்கலாம். இந்த விடயங்களை ஆராய்ந்து தேசிய பாதுகாப்பு தொடர்பில் அவதானம் செலுத்த வேண்டும் என நான் ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க தலைமையிலான அரசாங்கத்திடம் கேட்டுக்கொள்கிறேன்.

பொதுஜன பெரமுனவின் வேட்பாளர் ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார். இவ்வாறான கொலைக் கும்பல்கள் குறித்து அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும். தேசிய பாதுகாப்பு பற்றி வகுப்பு எடுக்கத் தயார் என தேசிய மக்கள் சக்தியின் அமைச்சர்கள் கூறினார்கள்.

துப்பாக்கிக் குழுக்கள் அல்லது ஆயுதம் ஏந்திய நபர்கள் இருந்தால் அவர்கள் சட்டத்தின் முன் நிறுத்தப்பட்டு தண்டிக்கப்பட வேண்டும்-என்றார். (அ)

# மாத்தறை சிறையில் பதற்றம்!

கொழும்பு, ஏப். 24

மாத்தறை சிறைச்சாலையில் ஏற்பட்ட அமைதியின்மை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சிறையில் இரண்டு கைதி குழுக்களுக்கு இடையே நேற்று முன் தினம் இரவு மோதல் ஏற்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

அதைக் கட்டுப்படுத்த சிறை அதிகாரிகள் வானத்தை நோக்கி துப்பாக்கியால் சுட்டனர்.

இருப்பினும், நேற்று முன் தினம் இரவு ஏற்பட்ட அமைதியின்மையை கட்டுப்படுத்த முடியாததால் கண்ணீர் புகைக்குண்டுகளை பயன்படுத்த வேண்டியதாயிற்று என்றும் பொலிஸார் சுட்டிக்காட்டினர்.

நிலைமையைக் கட்டுப்படுத்த விசேட பொலிஸ் பொலிஸ் அதிரடைப் படையினரை வரவழைக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

மாத்தறை சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள ஒரு கைதியை வேறு சிறைச்சாலைக்கு அழைத்துச் செல்ல முயன்றபோது இந்த பதற்றமான சூழ்நிலை ஏற்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது. (அ)

# 2024 ஆம் ஆண்டில் இலங்கையின் பொருளாதாரம் மீட்சி கண்டுள்ளது

## உலக வங்கி விசேட அறிக்கை

கொழும்பு, ஏப். 24

**2024 ஆம் ஆண்டில் இலங்கையின் பொருளாதாரம் குறிப்பிடத்தக்க மீட்சியை அடைந்துள்ளதாகவும், உலக வங்கியின் கணிக்கப்பட்ட 4.4 வீத வளர்ச்சி விகிதத்தை விட 5 வீத வளர்ச்சி விகிதத்தைப் பதிவு செய்துள்ளதாகவும் உலக வங்கி தெரிவித்துள்ளது.**

அறிக்கையில் உலக வங்கி, இந்த வளர்ச்சிக்கு தொழில் துறை, சேவைகளில், குறிப்பாக கட்டுமானம் மற்றும் சுற்றுலா தொடர்பான சேவைகளில் வலுவான செயல்திறன் உந்தப்பட்டுள்ளதாகவும்சுட்டிக்காட்டியது.

இருப்பினும், உலகளாவிய பின்னடைவுகள், முன்னெப்போதும் இல்லாத வர்த்தகக் கொள்கை நிச்சயமற்ற தன்மைக்கு மத்தியில், நெருக்கடியின் நீடித்த விளைவுகள் மற்றும் வளர்ச்சிக்கான கட்டமைப்புத் தடைகள் காரணமாக 2025 ஆம் ஆண்டில் இலங்கையின் வளர்ச்சி 3.5 வீதமாகக் குறையும் என்று உலக வங்கி கணித்துள்ளது.

“நிலையான பாதை” என்ற தலைப்பில் உலக வங்கியின் இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை வெளியிடப்படும்இலங்கை மேம்பாட்டு புதுப் பிப்பு நேற்று வெளியிடப்பட்டது.

நேர்மறையான வளர்ச்சி மற்றும் நிதி செயல்திறன் இருந்தபோதிலும், இலங்கை குறிப்பிடத்தக்க சவால்கள் இன்னும் உள்ளன என்பதை இது எடுத்துக்காட்டுகிறது.

பொருளாதாரம் மீண்டு வரும் வேளையில், பல இலங்கையர்கள் இன்னும் சிரமப்படுகிறார்கள்.

வீட்டு வருமானம், வேலை வாய்ப்பு மற்றும் ஒட்டுமொத்த நலன்புரி இன்னும் நெருக்கடிக்கு முந்தைய நிலைகளை விட மிகவும் குறைவாகவே உள்ளன.

மேலும் வறுமை விகிதம் 2024 இல் 24.5 சதவீதமாக ஆபத்தான அளவில் அதிகமாக உள்ளது.தொழிலாளர் சந்தை தொடர்ந்து போராடி வருகிறது.

இதனால் மக்கள் வெளிநாடுகளில் வாய்ப்புகளைத் தேடுவ மலைதீவுகள், நேபாளம் மற்றும் இலங்கைக்கான உலக வங்கி பிரிவு பணிப்பாளர் டேவிட் சிஸ்லன்-

இலங்கையின் பொருளாதாரம் எதிர்பார்த்ததை விட வலுவாக மீண்டு வரும் அதே வேளையில், மக்கள்தொகையில் கணிசமான பகுதியினர் சுமார் மூன்றில் ஒரு பங்கு வறுமையில் உள்ளனர் அல்லது மீண்டும் வறுமையில் விழும் அபாயத்தில் உள்ளனர்.

இந்த மீட்பு அனைவருக்கும், குறிப்பாக கடுமையாக பாதிக்கப்பட்டவர்களுக்கு தொழில் செய்வதை உறுதி செய்வதற்காக, வேலைவாய்ப்புகளை உருவாக்கும் மற்றும் ஏழைகளுக்கு ஆதரவளிக்கும் கொள்கைகளில் இலங்கை கவனம் செலுத்த முடியும் என்றார்.

அதிகரித்து வரும் நிச்சயமற்ற உலகளாவிய சூழலுக்கு மத்தியில், நடுத்தர கால வளர்ச்சி மற்றும் வறுமைக் குறைப்பு, பெரிய பொருளாதார நிலைத்தன்மையைப் பேணுவதையும், முக்கிய கட்டமைப்பு சீர்திருத்தங்களைச் செயல்படுத்துவதையும் சார்ந்துள்ளது என்பதை உலக வங்கியின் அறிக்கை அடிக்கோடிட்டுக் காட்டுகிறது.

2026 ஆம் ஆண்டில் இலங்கைக்கு சுமார் 3.1 வீத மிதமான வளர்ச்சி இருக்கும் என்று உலக வங்கி கணித்துள்ளது.

வர்த்தகம், முதலீடு, போட்டி மற்றும் பெண் தொழிலாளர் பங்கேற்பை மேம்படுத்தும் சீர்திருத்தங்களை வெற்றிகரமாக செயல்படுத்துவதன் மூலம் அதிக வளர்ச்சிப் பாதைக்கு மாறுவது, அனைத்து இலங்கையர்களும் மீட்சியிலிருந்து பயனடைவதை உறுதி செய்வதற்கு அவசியம்.

எதிர்காலத்தைப் பொறுத்தவரை, பெரிய நிதி மற்றும் நிதி நிலைத்தன்மையைப் பராமரிக்கவும், போட்டித்தன்மையை அதிகரிக்கவும், உற்பத்தித்திறனை அதிகரிக்கவும், வேலை வாய்ப்புகளை விரிவுபடுத்தவும் கொள்கை சீர்திருத்தங்களின் தொடர்ச்சியான தேவையை உலக வங்கி வலியுறுத்துகிறது.

தெற்காசிய பிராந்தியத்தில் பொருளாதார முன்னேற்றங்கள் மற்றும் வாய்ப்புகளை ஆராய்ந்து, நாடுகள் எதிர்கொள்ளும் கொள்கை சவால்களை பகுப்பாய்வு செய்யும், வருடத்திற்கு இரண்டு முறை உலக வங்கி அறிக்கையான தெற்காசிய மேம்பாட்டு புதுப்பிப்பின் ஒரு துணைப் பகுதியாக இலங்கை மேம்பாட்டு புதுப்பிப்பு உள்ளது.

2025 ஏப்ரல் பதிப்பான டாக்ஸிங் டைம்ஸானது, பிராந்திய வளர்ச்சி 2025 ஆம் ஆண்டில் 5.8 சதவீதமாகக் குறையும் அக்டோபர் கணிப்புகளை விட 0.4 சதவீத புள்ளிகள் குறைவாக இருக்கும் 2026 இல் 6.1 சதவீதமாக உயரும் என்று கணித்துள்ளது.

இந்தக் கண்ணோட்டம், மிகவும் நிச்சயமற்ற உலகளாவிய நிலப்பரப்பு, வரையறுக்கப்பட்ட நிதி இடம் உள்ளிட்ட உள்நாட்டு பாதிப்புகளுடன் இணைந்து அதிகரித்த அபாயங்களுக்கு உட்பட்டது.

பிராந்தியத்தில் உள்நாட்டு வளத் திரட்டலின் நிலையை பகுப்பாய்வு செய்யும் ஒரு சிறப்பு அத்தியாயம் இதில் அடங்கும்.

பெரும்பாலும் அதிக வரி விகிதங்கள் இருந்தபோதிலும், பிராந்தியத்தின் வரி வருவாய் வளர்ந்து வரும் சந்தைகள் மற்றும் வளரும் பொருளாதாரங்களுக்கான சராசரியை விடக் குறைவாகவே உள்ளது.

அதிகரித்து வரும் சவாலான உலகளாவிய பொருளாதார சூழலுக்கு மத்தியில், மீள்தன்மையை மேம்படுத்த, வரிக் கொள்கை மற்றும் நிர்வாகத்தில் உள்ள திறமையின்மையை நாடுகள் எவ்வாறு நிவர்த்தி செய்து வருவாயை அதிகரிக்க முடியும் என்பதை அறிக்கை கோடிட்டுக் காட்டுகிறது. (அ)

# முட்டை விலையில் வீழ்ச்சி!

கொழும்பு, ஏப். 24

சந்தையில் முட்டை விலை குறைந்துள்ளதாக நுகர்வோர் கூறுகின்றனர்.

அதன்படி, முட்டை ஒன்றின் விலை தற்சமயம் 23 ரூபா முதல் 29 ரூபா வரை விற்பனை செய்யப்படுவதாக வர்த்தகர்கள் கூறுகின்றனர்.

இருப்பினும், புத்தாண்டு பண்டிகை காலத்தில் முட்டைகள் அதிக விலைக்கு விற்கப்பட்டன.இதன்போது முட்டைகள் 47 ரூபா முதல் 50 ரூபா வரை விற்கப்பட்டன.

இந்த நாட்களில் முட்டைக்கான தேவை குறைந்துள்ளதால், முட்டை விலை குறைந்துள்ளதாக சந்தை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (அ)

# அமைச்சர்களுக்கு வழங்கப்படும் வாகன எண்ணிக்கை குறைப்பு!



கொழும்பு, ஏப். 24

அமைச்சர்களுக்கு வழங்கப்படும் வாகனங்களின் எண்ணிக்கையை இரண்டாகக் கட்டுப்படுத்தும் சுற்றறிக்கை வெளியிடப் பட்டுள்ளது.

அதே நேரத்தில், அமைச்சர்களுக்கு மாதத்திற்கு வழங்கப்படும் எரிபொருளின் அளவும் 700 லீற்றராக வரையறுக்கப்பட்டுள்ளது.

முன்னதாக, ஒரு அமைச்சருக்கு மூன்று வாகனங்கள் வழங்கப்பட்டு, மாதந்தோறும் 2,250 லீற்றர் எரிபொருள் வழங்கப்பட்டது.

ஜனாதிபதியின் அறிவுறுத்தலின் பேரில் இந்த நடவடிக்கை எடுக்கப்பட் டதாக பொது பாதுகாப்பு மற்றும் பாராளுமன்ற விவகார அமைச்சர் ஆனந்த விஜேபால தெரிவித்தார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விமானப்படையினர் வசம் உள்ள வீதியை விடுவிக்க நடவடிக்கை!

மட்டக்களப்பு, ஏப். 24

**மட்டக்களப்பில் புதூர் பகுதியில் விமானப்படையினரின் கட்டுப்பாட்டில் இருக்கும் வீதியை பொதுமக்களின் பாவனைக்காக கையளிப்பதற்கான ஏற்பாடுகள் நேற்று துரித கதியில் இடம்பெற்றதை அவதானிக்க முடிந்தது.**

நீண்ட காலமாக விமானப்படையினரின் கட்டுப்பாட்டில் இருக்கும் இந்த வீதியை திறந்து விடுமாறு பொதுமக்கள் கோரிக்கைளை முன்வைத்து வந்த நிலையில், தற்போதே இவ் வீதியை திறப்பதற்குரிய ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன.

நேற்று விமானப்படையினரின் ஒத்துழைப்புடன் பாதுகாப்பு வேலிகளை அகற்றும் பணிகள் முன்னெடுக்கப்பட்டன.

இந்த பணிகளை மட்டக்களப்பு மாநகரசபையின் ஆணையாளர் என்.தனஞ்ஜெயன், மண்முனை வடக்கு பிரதேச செயலாளர் சிவப்பிரியா வில்வரெட்னம், விமானப்படையின் கட்டளை அதிகாரி ஆகியோர் பார்வையிட்டனர். இந்த வீதியானது திறக்கப்படுமானால் மட்டக்களப்பு நகரிலிருந்து வலையிறவு பாலம் ஊடாக வவுணதீவு பிரதேசத்திற்கு செல்வோர் குறைந்த தூரத்தில் செல்லமுடியும் என்பது குறிப்பிடத்தக்கது. (அ)

## பாப்பரசருக்கு மட்டக்களப்பில் அஞ்சலி



மட்டக்களப்பு, ஏப். 24

கத்தோலிக்க திருச்சபையின் தலைவர் பரிசுத்த பாப்பரசர் பிரான்சிஸின் நித்திய இளைப்பாற்றியை அடுத்து மட்டக்களப்பில் உள்ள கிறிஸ்தவ தேவாலயங்களில் அன்னாரது மறைவுக்கு ஆழ்ந்த அனுதாபம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு ஆயர் இல்லம் மற்றும் புனித ஜோசப் வாஸ் சபை, புளியந்தீவு புனித மரியாள் பேராலய பங்கு தந்தை பங்கு மக்களால் அனுதாபப் பதாகைகளும் வெள்ளை கொடிகளும் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன. மரியாள் தேவாலய கொடிகளும் அரைக்கம்பத்தில் பறக்க விடப்பட்டுள்ளன. (அ)

# கசிப்பு உற்பத்தி நிலையம் பொலிஸாரால் முற்றுகை

திருமலை, ஏப். 24

திருகோணமலை மூதூர் தங்கபுரம் காட்டுப் பகுதியில் இயங்கிய சட்டவிரோத கசிப்பு உற்பத்தி நிலையத்தை மூதூர் பொலிஸார் முற்றுகையிட்டு கசிப்பு காய்ச்ச பயன்படுத்தப்படும் பெரும் தொகை கோடா வினை கைப்பற்றியுள்ளனர்.

மூன்று பரல்களிலிருந்து தலா 180 லீற்றர் கசிப்பு காய்ச்ச பயன்படுத்தப்படும் கோடா கைப்பற்றப்பட்டுள்ளது. முற்றுகை நடவடிக்கையின்போது 25 வயது மதிக்கத்தக்க இளைஞர் ஒருவரையும் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலின் அடிப்படையில் சுற்றிவழிப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளது. சம்பவம் தொடர்பிலான மேலதிக விசாரணைகளை மூதூர் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

# இலஞ்சம் வாங்கிய குற்றச்சாட்டு; இரண்டு பேருக்கு விளக்கமறியல்

அம்பாறை, ஏப். 24

அம்பாறை மாவட்டம் கல்முனையில் அமைந்துள்ள இலங்கை போக்குவரத்துச் சபையின் பிராந்திய காரியாலயத்தில் பணி நீக்கம் செய்யப்பட்ட பஸ் நடத்துநர் ஒருவரிடம் இருந்து இலஞ்சம் பெற முயற்சித்தார் எனும் குற்றச்சாட்டில் கைதான கிழக்கு மாகாண ஒழுக்காற்று குழு பரிசோதகர் ஒருவரையும் அங்கு கடமையாற்றும் பாதுகாப்பு உத்தியோகத்தரையும் 14 நாட்கள் விளக்கமறியலில் வைக்குமாறு கல்முனை நீதிவான் நீதிமன்று உத்தரவிட்டுள்ளது.

இலங்கை போக்குவரத்துச் சபையின் கல்முனையில் அமைந்துள்ள பிராந்திய காரியாலயத்தில் கடமையாற்றிவரும் கிழக்கு மாகாண ஒழுக்காற்று குழு பரிசோதகர் தன்னிடம் 01 லட்சம் ரூபாய் இலஞ்சம் கோருவதாக பணி நீக்கம் செய்யப்பட்ட பஸ் நடத்துநர் ஒருவர் கொழும்பிலுள்ள லஞ்ச ஊழல் குற்றச்சாட்டுகளை விசாரிக்கும் ஆணைக்குழுவிடம் முறைப்பாடு செய்திருந்தார்.

இதனடிப்படையில் ஆணைக்குழு அதிகாரிகளின் ஆலோசனைக்கமைய சம்பவ தினமான நேற்று முன் தினம் செவ்வாய்க்கிழமை கல்முனையில் அமைந்துள்ள இலங்கை போக்குவரத்துச் சபையின் பிராந்திய காரியாலயத்தில் வைத்து கிழக்கு மாகாண ஒழுக்காற்று குழு பரிசோதகர் கூறியமைக்கு அமைவாக அவரின் காரியாலய பாதுகாப்பு உத்தியோகத்தரிடம் இலஞ்சப் பணத்தில் ஒரு பகுதியை பணி நீக்கம் செய்யப்பட்ட பஸ் நடத்துநர் வழங்கியுள்ளார்.

இதன்போது அங்கு மாறுவேடத்தில் காத்திருந்த இலஞ்ச ஊழல் குற்றச்சாட்டுகளை விசாரிக்கும் ஆணைக்குழுவின் அதிகாரிகள் கிழக்கு மாகாண ஒழுக்காற்று குழு பரிசோதகரையும் அங்கு கடமையாற்றும் பாதுகாப்பு உத்தியோகத்தரையும் கைது செய்தனர்.

இதனையடுத்து கைது செய்யப்பட்ட கிழக்கு மாகாண ஒழுக்காற்று குழு பரிசோதகர் மற்றும் பாதுகாப்பு உத்தியோகத்தர் இருவரையும் கல்முனை நீதவான் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்திய போது 14 நாட்கள் சந்தேக நபர்களை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டார். (அ)

# பாதுகாப்பற்ற நீர் குழியில் சிறுவன் சடலமாக மீட்பு!

**சம்மாந்துறை பொலிஸார் விசாரணை**



அம்பாறை, ஏப். 24

வீட்டின் அருகில் விளையாடிக்கொண்டிருந்த சிறுவன் சடலமாக பாதுகாப்பற்ற நீர்க் குழியில் இருந்து மீட்கப்பட்ட சம்பவம் ஒன்று சம்மாந்துறை பொலிஸ் பிரிவில் பதிவாகியுள்ளது.

அம்பாறை மாவட்டம் சம்மாந்துறை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட புற நகர் பகுதியான உடங்கா -02 பௌஸ் மாவத்தை பகுதியில் இச்சம்பவம் செவ்வாய்க்கிழமை மாலை இடம் பெற்றுள்ளது.

குறித்த சம்பவத்தில் மூன்று வயது மதிக்கத்தக்க முஹம்மத் லுக்மான் என்ற ஆண் பிள்ளை நீர் குழியிலிருந்து மரணமடைந்த நிலையில் மீட்கப்பட்டுள்ளதாக சம்மாந்துறை பொலிஸார் தெரிவித்தனர்.

சுமார் 3 மணித்தியாலமாக அப்பகுதியில் காணாமல்போயிருந்த குறித்த சிறுவனை பொது மக்களுடன் இணைந்து பொலிஸாரும் தேடிய நிலையில் அச்சிறுவனின் வீட்டுக்கு அருகில் உள்ள வெற்றுக்காணியில் உள்ள பாதகாப்பற்ற நீர்க்குழிக்குள் மரணமடைந்த நிலையில் சிறுவன் சடலமாக மீட்கப்பட்டார்.

இச்சிறுவன் தவறி குறித்த குழியில் விழுந்தாரா அல்லது கொலை செய்யப்பட்டு போடப்பட்டாரா என மேலதிக விசாரணைகள் தற்போது முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

அத்துடன் இச்சம்பவத்தில் கிடைக்கப்பெற்ற சி.சி.ரி.வி. காணொளி ஒன்றில் இனம் தெரியாத நபர் மரணமடைந்த சிறுவனை அழைத்துச் செல்லும் காட்சி ஒன்றும் பதிவாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

மரணம் அடைந்த சிறுவனின் சடலம் தற்போது சம்மாந்துறை ஆதார வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. சம்பவ இடத்திற்கு சென்ற சம்மாந்துறை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி கே.டி.எச். ஜெயலத் தலைமையில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## போதை மாத்திரைகளை விநியோகித்தவர் கைது!

அம்பாறை, ஏப். 24

போதை மாத்திரைகளை நீண்ட காலமாக இளைஞர்களுக்கு விநியோகம் செய்த சந்தேகத்தின் அடிப்படையில் 29 வயது சந்தேக நபரை பெரியநீலாவணை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற தகவலின் பிரகாரம் மேற்கொள்ளப்பட்ட சோதனை நடவடிக்கையின் போது செவ்வாய்க்கிழமை இரவு அம்பாறை மாவட்டம் பெரிய நீலாவணை பொலிஸ் பிரிவில் உள்ள மருதமுனை புறநகர் பகுதியில் சோதனை மேற்கொள்ளப்பட்டது.

இதன் போது சுமார் 700 இற்கும் அதிகமான போதை மாத்திரைகளை தன்வசம் வைத்திருந்த 29 வயது சந்தேக நபர் கைதானார்.

சந்தேக நபருடன் சான்றுப் பொருட்களை சட்ட நடவடிக்கைக்காக கல்முனை நீதிவான் நீதிமன்றத்தில் ஒப்படைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில் பெரியநீலாவணை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி பொலிஸ் பரிசோதகர் ஜே.எஸ்.கே.வீரசிங்க வழிநடத்தலில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (அ)

## கிழக்கு சித்திரை புத்தாண்டு பெருவிழா!





திருமலை, ஏப் 24

கிழக்கு மாகாண தமிழ் சிங்கள சித்திரைப் புத்தாண்டு பெருவிழா நேற்று முன்தினம் ஆளுநர் செயலகத்துக்கு முன்பாக உள்ள உவர்மலை சிறுவர் விளையாட்டு மைதானத்தில் இடம் பெற்றது.

கிழக்கு மாகாண அமைச்சுக்களினால் ஏற்பாடு செய்யப்பட்ட இவ்விளையாட்டு விழாவுக்கு கிழக்கு மாகாண ஆளுநர் பேராசிரியர் ஜயந்த லால் ரட்ணசேகர பிரதம அதிதியாக கலந்து கொண்டு ஆரம்பித்து வைத்தார்.

இதில் கிழக்கு மாகாண பிரதம செயலாளர் மற்றும் பிரதிப் பிரதம செயலாளர்கள், அமைச்சின் செயலாளர்கள் மற்றும் உதவிச் செயலாளர்கள், மாகாண திணைக்களப் பணிப்பாளர்கள் மற்றும் ஆணையாளர்கள் உள்ளிட்ட பல உயரதிகாரிகள், உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் என பலரும் கலந்து கொண்டு சிறப்பித்த அதேவேளை அங்கு இடம்பெற்ற விளையாட்டு நிகழ்வுகளிலும் பங்கேற்றனர்.

நேற்றைய தினம் காலை 9.30 மணிக்கு ஆரம்பமான இந்த விளையாட்டு போட்டி நிகழ்வுகள் இரவு 10.30 மணி வரை இடம்பெற்றதும் குறிப்பிடத்தக்கது. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காஷ்மீரில் தாக்குதல் 28 சுற்றுலாவிகள் பலி

## சவூதியிலிருந்து உடன் இந்தியா திரும்பினார் மோடி



புதுடில்லி, ஏப். 24

**ஜம்மு காஷ்மீரின் பஹல்காம் - பைசரன் பள்ளத்தாக்கில் சுற்றுலா பயணிகள் மீது தீவிரவாதிகள் நடத்திய துப்பாக்கி சூட்டில் 28 பேர் உயிரிழந்தனர். பலர் காயமடைந்தனர். காயமடைந்தவர்களில் சிலரின் நிலைமை கவலைக்கிடமாக உள்ளதாகத் தெரிய வருகின்றது.**

ஜம்மு காஷ்மீரில் தற்போது கோடை சுற்றுலா ஆரம்பமாகியுள்ளது. இதனால், ஏராளமான சுற்றுலாவிகள் அங்கு செல்கின்றனர். பஹல்காம் மலைப்பகுதியின் அடர்ந்த வனப்பகுதிகள், தெளிவான நீரோடைகள், பரந்த புல்வெளிகள் பிரபலமானவை. பள்ளத்தாக்கு பகுதியான இங்கு வாகனங்களில் செல்ல முடியாது. குதிரைகளிலேயே பயணிக்க முடியும்.

இந்த நிலையில் நேற்று முன்தினம் பிற்பகல் 3 மணியளவில் இராணுவ உடையில் வந்த தீவிரவாதிகள் அந்தப் பகுதியை சுற்றிவளைத்து துப்பாக்கிச்சூடு நடத்தினர். இதில், வெளிநாட்டு சுற்றுலாவிகள் உட்பட 28 பேர் உயிரிழந்தனர். பலர் காயமடைந்தனர்.

இதைத் தொடர்ந்து, இராணுவம் அங்கு வந்து அந்தப் பகுதியை தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தது. எனினும், தீவிரவாதிகள் எவரையும் இராணுவத்தால் பிடிக்க முடியவில்லை.

2019 காஷ்மீரின் புல்வாமா பகுதியில் இராணுவத்தினர் மீது நடத்தப்பட்ட தாக்குதலில் 47 பேர் கொல்லப்பட்டனர். இந்தத் தாக்குதலின் பின்னர் காஷ்மீரில் நடத்தப்பட்ட மிகப் பெரிய தீவிரவாத தாக்குதல் இதுவாகும்.

காஷ்மீரில் அமர்நாத் யாத்திரை எதிர்வரும் ஜூலை மாதம் ஆரம்பமாகிறது. இந்த யாத்திரை பஹல்காம் வழியாகவும் நடைபெறுவது வழமை. இந்த நிலையில், இந்தத் தீவிரவாத தாக்குதல் அமர்நாத் யாத்திரையின் பாதுகாப்பை கேள்விக்குறியாக்கி உள்ளது.

தாக்குதலையடுத்து, சவூதி அரேபியா சென்றுள்ள இந்திய பிரதமர் மோடி தனது பயணத்தை முடித்துக் கொண்டு இந்தியாவுக்கு திரும்பியுள்ளார். இதனிடையே அவர் வெளியிட்ட கண்டனத்தில், "இந்த தாக்குதலை நடத்தியவர்கள் தப்ப முடியாது. அவர்களின் தீய நோக்கம் ஒருபோதும் நிறைவேறாது. தீவிரவாதத்துக்கு எதிரான நமது போராட்டம் உறுதியானது. அது மேலும் வலுவடையும்" - என்று குறிப்பிட்டுள்ளார்.

இந்தத் தாக்குதலுக்கு அமெரிக்கா, ரஷ்யா, இஸ்ரேல் நாடுகளின் தலைவர்கள் உட்பட உலக நாடுகளின் தலைவர்கள் கண்டனம் வெளியிட்டு வருகின்றனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)



# உடைந்த பூந்தொட்டி ரூ. 1.9 கோடிக்கு ஏலம்!

லண்டன், ஏப். 24

இங்கிலாந்தில் உடைந்த பூந்தொட்டி ஒன்று ஒரு கோடியே 98 இலட்சம் இலங்கை ரூபாய்க்கு ஏலத்தில் விற்பனையாகியுள்ளது.

இங்கிலாந்தில் ஒரு தோட்டத்தில் உடைந்த நிலையில் 4 அடி உயரமுள்ள பூந்தொட்டி கண்டுபிடிக்கப்பட்டது. அந்தப் பூந்தொட்டி ஜேர்மனியை சேர்ந்த புகழ்பெற்ற செரமிக் கலைஞரான ஹான்ஸ் கோபர் என்பவரால் உருவாக்கப்பட்டது என்பது ஆய்வில் தெரிய வந்தது.

இதையடுத்து, லண்டனை சேர்ந்த நிறுவனம் அந்த பூந்தொட்டியை ஏலத்துக்கு விட்டது. இதனை வாங்க அமெரிக்கா, டென்மார்க் நாடுகளை சேர்ந்தவர்களிடையே போட்டி நிலவியது.

இதனால், அதன் விலை அதிகரித்து இறுதியாக அந்தப் பூந்தொட்டி 66 ஆயிரம் டொலர்களுக்கு விற்பனையானது. இதன் இலங்கை மதிப்பு சுமார் ஒரு கோடியே 98 இலட்சம் ரூபாயாகும். முதலில் இந்தப் பூந்தொட்டி 35 இலட்சம் ரூபாய்க்கு ஏலம் போகும் என்றே மதிப்பிடப்பட்டது.

இதேவேளை, உடைந்த இந்தப் பூந்தொட்டியை பழமை மாறாமல் சரிசெய்வதற்கு சுமார் 30 இலட்சம் ரூபாய் வரை செலவாகும் என்று நிபுணர்கள் மதிப்பிட்டுள்ளனர்.

ஜேர்மனை சேர்ந்த ஹான்ஸ் கோபர், 1939ஆம் ஆண்டு இரண்டாம் உலகப் போர் தீவிரமடைந்ததை தொடர்ந்து இங்கிலாந்துக்கு குடிபெயர்ந்தார். செரமிக் கலையில் தேர்ந்தவராக அறியப்பட்ட அவர் கடந்த 1981இல் காலமானார். அவர் உருவாக்கிய படைப்புகள் பொதுவாக 10 செ. மீ. முதல் 40 செ. மீ. வரையே இருக்கும். அவர் உருவாக்கிய படைப்புகளில் உடைந்த இந்த பூந்தொட்டியே உயரமானதாகக் கருதப்படுகிறது. இந்தப் பூந்தொட்டியின் அடியில் அவரின் கையொப்பமும் உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)



# காஸாமீது இஸ்ரேல் தாக்குதல் 17 பலஸ்தீனர்கள் உயிரிழப்பு

காஸா, ஏப். 24

காஸாமீது இஸ்ரேல் நேற்று நடத்திய வான்வழி தாக்குதலில் 17 பலஸ்தீனர்கள் கொல்லப்பட்டனர். கொல்லப்பட்டவர்களில் பலர் பெண்கள் மற்றும் சிறுவர்கள் என்று பலஸ்தீன சுகாதார பிரிவு தெரிவித்துள்ளது.

இஸ்ரேல் - காஸா இடையிலான போர் நிறுத்த ஒப்பந்தம் முடிவுக்கு வந்த நிலையில் இஸ்ரேல் இந்தத் தாக்குதலை நடத்தியுள்ளது.

இதேசமயம், இஸ்ரேல் தாக்குதலில் காஸாவில் அழிவடைந்த கட்டட இடிபாடுகளை அகற்றும் பணிகளில் ஈடுபட்டிருந்த கனரக வாகனங்கள் மீதும் இஸ்ரேல் தாக்குதல்களை நடத்தியுள்ளது. இதில், 9 கனரக வாகனங்கள் அழிவடைந்தன என்றும் தெரிய வருகின்றது.

2023 ஒக்ரோபர் தாக்குதலை தொடர்ந்து, பணய கைதிகளை மீட்கவும் ஹமாஸ் ஆயுதக்குழுவினரை முழுமையாக அழிக்கும் நோக்கிலும் காஸா மீது இஸ்ரேல் தரைவழி, வான்வழி தாக்குதல்களை நடத்தி வருவது தெரிந்ததே.

இதுவரையான போரில் 51 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பலஸ்தீனர்கள் கொல்லப்பட்டனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

ரூ. 66,500 கோடி நிதி நிறுத்தம்

# அரசாங்கத்துக்கு எதிராக ஹவார்ட் பல்கலை. வழக்கு

வாஷிங்டன், ஏப். 24

புகழ்பெற்ற ஹவார்ட் பல்கலைக்கழகத்துக்கான 220 கோடி டொலர் - நம் நாட்டு மதிப்பில் சுமார் 66 ஆயிரத்து 500 கோடி ரூபாய் நிதியை அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் நிறுத்தி வைத்துள்ளார். இதற்கு எதிராக அந்தப் பல்கலைக்கழகம் ட்ரம்ப் நிர்வாகத்தின் மீது வழக்கு தொடர்ந்துள்ளது.

அமெரிக்க பல்கலைக்கழகங்களின் மாணவர்கள் காஸா போர் உட்பட பல்வேறு விவகாரங்கள் தொடர்பில் போராட்டங்களில் ஈடுபட்டனர். இதைத் தடுக்குமாறு ஜனாதிபதி ட்ரம்ப் பணித்திருந்தார். "ஹவார்ட் பல்கலைக்கழகம் தனது நிர்வாக முறைமையை மாற்ற வேண்டும். இல்லையென்றால் வரி விலக்கு இரத்துச் செய்யப்படும் என்று ட்ரம்ப் எச்சரித்திருந்தார்.

அவரின் இந்த எச்சரிக்கைக்கு பல பல்கலைக்கழகங்கள் எதிர்ப்பு தெரிவித்தன. ஹவார்ட் பல்கலைக்கழகம் ட்ரம்ப் நிர்வாகத்தின் கோரிக்கைகளை ஏற்க மறுத்துவிட்டது. அத்துடன், சட்டவிரோதமான நிபந்தனைகளை விதிக்கின்றனர் என்று குற்றஞ்சாட்டியது. மேலும், அரசின் நிபந்தனைகளை ஏற்கப் போவதில்லை என்றும் அறிவித்தது.

இதையடுத்து, ட்ரம்ப் நிர்வாகம் "சிவில் உரிமைகள் சட்டங்களை நிலைநிறுத்தும் பொறுப்பைக் கடைப்பிடிக்காத பல்கலைக்கழகங்களுக்கு நிதி கிடைக்காது. கடந்த சில ஆண்டுகளாகவே பல்கலைக்கழகங்களில் கற்றல் சீர்குலைவு நடந்து வருகிறது", என்று கூறி ஹவார்ட் பல்கலைக்கழகத்துக்கான 220 கோடி டொலர் நிதி உதவியை நிறுத்தியது.

இதற்கு எதிராகவே ஹவார்ட் பல்கலைக்கழக நிர்வாகம் ட்ரம்ப் நிர்வாகத்தின்மீது வழக்கு தொடர்ந்துள்ளது. (ஐ)

# வான் கவிழ்ந்த விபத்தில் பாகிஸ்தானில் 16 பேர் பலி

லாகூர், ஏப். 24

மலைப்பகுதியில் அதிவேகமாக சென்ற வான் கவிழ்ந்த விபத்தில் சிறுவர்கள் உட்பட 16 பேர் உயிரிழந்தனர்.

பாகிஸ்தானின் சிந்து மாகாணத்தில் பதின் எனும் பகுதியில் இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் இடம்பெற்றுள்ளது.

மலைப்பகுதியில் அதிவேகமாக சென்ற அந்த வாகனம் கட்டுப்பாட்டை இழந்து ஒரு பள்ளத்தாக்கில் கவிழ்ந்தது. இதில், பெண்கள் மற்றும் குழந்தைகள் உள்பட 16 பேர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர். 30 பேர் படுகாயமடைந்தனர்.

மீட்கப்பட்டவர்கள் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். இவர்களில் சிலரின் நிலைமை கவலைக்கிடமாக உள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

இந்த விபத்தில் சிக்கியவர்கள் அனைவரும் பலூசிஸ்தான் மாகாணத்தில் நெல் அறுவடைப் பணிக்காகச் சென்றுவிட்டு திரும்பி வந்து கொண்டிருந்தவர்கள் என்று தெரிய வந்தது. (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# லக்னோவை வீழ்த்தி டில்லி 6ஆவது வெற்றி!



லக்னோ, ஏப். 24

ஐ. பி. எல். தொடரின் 40ஆவது போட்டியில் டில்லி கப்பிட்டல்ஸ் 8 விக்கெட்கள் வித்தியாசத்தில் லக்னோ சுப்பர் ஜயன்ட்ஸை அதன் சொந்த மண்ணில் செவ்வாய்க்கிழமை வீழ்த்தியது.

முதலில் லக்னோ 20 ஓவர்களில் 6 விக்கெட்கள் இழப்புக்கு 159 ஓட்டங்கள் எடுத்தது. அடுத்து டில்லி 17.5 ஓவர்களில் 2 விக்கெட்கள் இழந்து 161 ஓட்டங்கள் எடுத்து வெற்றி பெற்றது.

இந்த போட்டியில் நாணயச் சுழற்சியில் வென்ற டில்லி பந்துவீச்சை தெரிவு செய்தது. டில்லி பதினொருவரில் மோஹித் சர்மா இடத்தில் துஷ்மந்த சாமீர சேர்க்கப்பட்டார். லக்னோ பதினொருவரில் மாற்றமில்லை.

லக்னோ இன்னிங்ஸை தொடங்கிய எய்டன் மார்க்ரம் - மிட்செல் மார்ஷ் கூட்டணி முதல் விக்கெட்டுக்கு 87 ஓட்டங்கள் சேர்த்தது. இந்த ஜோடியை துஷ்மந்த சாமீர 10-ஆவது ஓவரில் பிரித்தார்.

33 பந்துகளில் 2 பௌண்ட்ரிகள், 3 சிக்ஸர்களுடன் 52 ஓட்டங்கள் சேர்த்த மார்க்ரம் ஆட்டமிழந்தார். மூன்றாவது வீரராக வந்த அதிரடி வீரர் நிகோலஸ் பூரன், 2 பௌண்ட்ரிகளுடன் 9 ஓட்டங்களுக்கு போல்ட் ஆனார்.

அடுத்து வந்த அப்துல் சமதும் 2 ஓட்டங்களுக்கு நடையை கட்ட, சற்று நிதானமாக விளையாடி வந்த மிட்செல் மார்ஷ் 36 பந்துகளில் 3 பௌண்ட்ரிகள், ஒரு சிக்ஸருடன் 45 ஓட்டங்களுக்கு பௌல்டானார்.

5 மற்றும் 6ஆவது துடுப்பாட்ட வீரர்களாக களம் புகுந்த டேவிட் மில்லர் - ஆயுஷ் பதோனி, விக்கெட் சரிவை சற்று கட்டுப்படுத்தி 5ஆவது விக்கெட்டுக்கு 49 ஓட்டங்கள் சேர்த்தனர்.

பதோனி 6 பௌண்ட்ரிகள் உட்பட 36 ஓட்டங்களுக்கு கடைசி ஓவரில் விக்கெட்டை பறிகொடுத்தார். தொடர்ந்து வந்த கப்டன் ரிஷப் பந்தும் ஓட்டமின்றி அதே விதியைச் சந்தித்தார்.

ஓவர்கள் முடிவில் டேவிட் மில்லர் ஒரு பௌண்ட்ரியுடன் 14 ஓட்டங்களுக்கு ஆட்டமிழக்காமல் இருந்தார்.

டில்லி தரப்பில் முகேஷ் குமார் 4, மிட்செல் ஸ்டார்க், துஷ்மந்த சாமீர ஆகியோர் தலா ஒரு விக்கெட்டை கைப்பற்றினர்.

160 ஓட்டங்களை நோக்கி விளையாடிய டில்லி அணியில் கருண் நாயர் 2 பௌண்ட்ரிகள், 1 சிக்ஸருடன் 15 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்தார். மூன்றாவது வீரராக வந்த கே. எல். ராகுல், தொடக்க வீரர் அபிஷேக் பொரெலுடன் இணைந்தார்.

இந்த ஜோடி 2ஆவது விக்கெட்டுக்கு 69 ஓட்டங்கள் சேர்த்து வெற்றிக்கு அடித்தளமிட்டது. இதில் பொரெல் 5 பௌண்ட்ரிகள், ஒரு சிக்ஸருடன் 51 ஓட்டங்களுக்கு பெவிலியன் திரும்பினார்.

அடுத்து வந்த கப்டன் அக்ஸர் பட்டேல், ராகுலுடன் இணைந்தார். டில்லியை வெற்றிக்கு வழிநடத்திய இந்த ஜோடியில், ராகுல் 3 பௌண்ட்ரிகள், 3 சிக்ஸர்களுடன் 57, பட்டேல் ஒரு பௌண்ட்ரி, 4 சிக்ஸர்களுடன் 34 ஓட்டங்களுக்கு ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

லக்னோவின் பந்துவீச்சில் எய்டன் மார்க்ரம் 2 விக்கெட்களை எடுத்தார். (ஐ)

## சிம்பாவேக்கு எதிரான டெஸ்ட் பங்களாதேஷ் முன்னிலை!



சில்ஹட், ஏப். 24

சிம்பாவேவுக்கு எதிரான முதல் டெஸ்ட் போட்டியில் பங்களாதேஷ் 112 ஓட்டங்கள் முன்னிலை பெற்றுள்ளது.பங்களாதேஷ் மற்றும் சிம்பாவே அணிகளுக்கு இடையிலான முதல் டெஸ்ட் போட்டி திங்கட்கிழமை சில்ஹட்டில் தொடங்கியது.

முதல் இன்னிங்ஸில் பங்களாதேஷ் 191 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்தது. அந்த அணியில் அதிகபட்சமாக மோமினுல் ஹக் அதிகபட்சமாக 56 ஓட்டங்கள் எடுத்தார்.

சிம்பாவே அணி முதல் இன்னிங்ஸில் 273 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்தது. அந்த அணியில் அதிகபட்சமாக சீன் வில்லியம்ஸ் 59 ஓட்டங்களும், பிரையன் பென்னட் 57 ஓட்டங்களும் எடுத்தனர்.

பங்களாதேஷ் தரப்பில் மெஹிதி ஹூசன் மிராஸ் 5 விக்கெட்களையும் நஹித் ராணா 3 விக்கெட்களையும் கைப்பற்றினர்.

சிம்பாவே அணி 273 ஓட்டங்களுக்கு முதல் இன்னிங்ஸில் ஆட்டமிழக்க, 82 ஓட்டங்கள் பின் தங்கிய நிலையில் இரண்டாவது இன்னிங்ஸைத் தொடங்கியது பங்களாதேஷ். இரண்டாம் நாள் ஆட்டநேர முடிவில் பங்களாதேஷ் இரண்டாவது இன்னிங்ஸில் ஒரு விக்கெட் இழப்புக்கு 57 ஓட்டங்கள் எடுத்திருந்தது.

நேற்றுமுன்தினம் மூன்றாம் நாள் ஆட்டத்தைத் தொடர்ந்தது. மஹ்மதுல் ஹாசன் ஜாய் 33 ஓட்டங்களிலும், மோமினுல் ஹாக் 47 ஓட்டங்களிலும் ஆட்டமிழந்தனர். முஷ்பிகுர் ரஹீம் 4 ஓட்டங்களில் ஆட்டமிழந்து ஏமாற்றமளித்தார். இந்த நிலையில், கப்டன் நஜ்முல் ஹொசைன் ஷாண்டோ மற்றும் ஜேக்கர் அலி இருவரும் ஜோடி சேர்ந்தனர்.

இந்த இணை பொறுப்பை உணர்ந்து விளையாடி வருகிறது. சிறப்பாக விளையாடிய கப்டன் நஜ்முல் ஹொசைன் ஷாண்டோ அரைச்சதம் கடந்து அசத்தினார். அவர் 103 பந்துகளில் 60 ஓட்டங்கள் எடுத்து களத்தில் உள்ளார். அதில் 7 பௌண்ட்ரிகள் அடங்கும். ஜேக்கர் அலி 60 பந்துகளில் 21 ஓட்டங்களுடன் (3 பௌண்ட்ரிகள்) களத்தில் உள்ளார்.

மூன்றாம் நாள் ஆட்டநேர முடிவில் பங்களாதேஷ் 4 விக்கெட்களை இழந்து 194 ஓட்டங்கள் எடுத்துள்ளது.

## பாராட்டிய கோயங்கா கண்டுகொள்ளாத ராகுல்

லக்னோ, ஏப். 24

பாராட்டிப் பேச விரும்பிய லக்னோ அணியின் உரிமையாளரை சஞ்சீவ் கோயங்காவை கண்டுகொள்ளாமல் சென்ற டில்லி அணி வீரர் கே. எல். ராகுலில் காணொலி தற்போது இணையத்தில் வைரலாகி வருகிறது.

ஐ. பி. எல். 40ஆவது போட்டியில் லக்னோவை டில்லி வீழ்த்தியது. இந்தப் போட்டியில் சிறப்பாக விளை யாடிய கே.எல். ராகுல், 3 பௌண்ட்ரிகள், 3 சிக்ஸர்களுடன் 57 ஓட்டங்களை ஆட்டமிழக்காமல் எடுத்தார்.

போட்டி முடிந்ததும் வீரர்களுடன் கைகொடுக்கும் நிகழ்வில் பங்கேற்ற கே. எல். ராகுல் லக்னோ அணியின் உரிமையாளர் சஞ்சீவ் கோயங்காவிடம் கை கொடுத்துவிட்டு அங்கிருந்து உடனடியாக கிளம்பினார். அவரிடம் பாராட்டி பேச வந்த சஞ்சீவ் கோயங்காவை அவர் கண்டுகொள்ளவில்லை. இதேபோன்று கோயங்காவின் மகனும் பேச முற்பட்டார். ஆனால், கே. எல். ராகுல் விரும்பாமல் அங்கிருந்து நகர்ந்து சென்றார். இந்த காணொலிகள் சமூக வலைதளங்களில் பிரபலமாகி வருகின்றன.

கடந்தாண்டு எல்.ராகுல் தலைமையிலான லக்னோ அணி சரியாக விளையாடவில்லை. மேலும், ஹைதராபாத் அணிக்கு எதிரான போட்டியில் பெற்ற மிகப் பெரிய தோல்வியடைந்தது. இதனால், ராகுலை மைதானத்திலேயே கோயங்கா கடிந்தார். இதற்கு பலரும் கண்டனம் தெரிவித்தனர்.

முன்னதாக, சரியாக விளையாடவில்லை என லக்னோ அணியில் இருந்து வெளியேறிய கே .எல். ராகுலை டில்லி அணி ஏலத்தில் எடுத்தது. இந்த நிலையில், மைதானத்தில் வைத்து அவமானப்படுத்தப் பட்டதற்கு அங்கு வைத்தே அவர் தனது ஆட்டத்தின் மூலம் திருப்பி கொடுத்து விட்டதாக ரசிகர்கள் கருத்து தெரிவித்து வருகின்றனர்.

## விரைவாக 5,000 ஓட்டங்களை கடந்து கே. எல். ராகுல் சாதனை

லக்னோ, ஏப். 24

ஐபிஎல் கிரிக்கெட்டில் 5 ஆயிரம் ஓட்டங்களை விரைவாக எட்டிய வீரர் என்ற சாதனையை படைத்துள்ளார் இந்தியாவின் கே. எல். ராகுல். செவ்வாய்க்கிழமை நடந்த லக்னோ அணிக்கு எதிரான ஆட்டத்தில் இந்த சாதனையை அவர் படைத்தார்.

நடப்பு தொடரில் டில்லி கப்பிட்டல்ஸ் அணியில் விக்கெட் காப்பாளர் துடுப்பாட்ட வீரராக ராகுல் விளையாடி வருகிறார். தனது 130ஆவது ஐ. பி. எல். இன்னிங்ஸில் 5 ஆயிரம் ஓட்டங்களை அவர் எட்டினார். இதற்கு முன்பு 135 ஐ. பி. எல். இன்னிங்களில் 5 ஆயிரம் ஓட்டங்களை எட்டியிருந்தார் அவுஸ்திரேலியாவின் டேவிட் வோர்ணர். தற்போது, வோர்ணரின் சாதனையை ராகுல் முந்தியுள்ளார்.

ஐ. பி. எல். கிரிக்கெட்டில் 5,000 ஓட்டங்களை கடந்த 8ஆவது துடுப்பாட்ட வீரராக ராகுல் அறியப்படுகிறார். ஐ. பி. எல். கிரிக்கெட்டில் அதிக ஓட்டங்கள் எடுத்த வீரர்களில் 8,326 ஓட்டங்களுடன் கோலி முதலிடத்தில் உள்ளார்.

5 ஆயிரம் ஓட்டங்களை கடந்த வீரர்கள்
கே.எல்.ராகுல் - 130 இன்னிங்ஸ்
டேவிட் வோர்ணர் - 135 இன்னிங்ஸ்
விராட் கோலி - 157 இன்னிங்ஸ்
ஏபி டிவில்லியர்ஸ் - 161 இன்னிங்ஸ்
ஷிகர் தவான் - 168 இன்னிங்ஸ்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சைபர்...

291 போலி கணக்குகள் அடையாளம் காணப்பட்டுள்ளன என்றும் அவர் மேலும் கூறினார்.

இதேபோன்று, சிறார் பாலியல் தொடர்பான 7 குற்றச்செயல்களும் பதிவாகியுள்ளன. அதிகரித்து வரும் டிஜிற்றல் பயன்பாடு சைபர் பாதுகாப்பு விழிப்புணர்வை ஊக்குவிப்பதில் விரைவான நடவடிக்கையின் அவசியத்தை வெளிப்படுத்துகிறது என்றும் சாருக தமுனுபொல தெரிவித்தார். (ஐ)

## டான்...

மீது துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்டது.

இந்தத் துப்பாக்கிச்சூட்டில் இரு தோட்டாக்கள் அவரின் மார்பு மற்றும் தோளில் பாய்ந்தன. படுகாயமடைந்த டான் பிரியசாத் கொழும்பு தேசிய மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்த நிலையில் நேற்று காலை உயிரிழந்தார்.

விருந்து ஒன்றில் பங்கேற்றிருந்த டான் பிரியசாத் மது அருந்தியிருந்தார் என்றும் அந்தச் சமயம், மோட்டார் சைக்கிளில் வந்து இறங்கிய இருவர் துப்பாக்கிச்சூட்டை நடத்தி விட்டு தப்பிச் சென்றனர் என்றும் கூறப்படுகின்றது.

இந்தக் கொலையை விசாரிக்க 6 பொலிஸ் குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளன.

39 வயதான டான் பிரியசாத் வெல்லம்பிட்டி - மீதொட்டமுல்லையை சேர்ந்தவர். இவரின் சகோதரர் திலின பிரியசாத் சில ஆண்டுகளுக்கு முன்னர் வெட்டிக் கொல்லப்பட்டார். இவரின் கொலையுடன் தொடர்புடைய சந்தேகநபர்களான தந்தை மற்றும் மகனுக்கு டான் பிரியசாத் கொலையிலும் தொடர்பிருக்கலாம் என்று கருதப்படுகிறது. இதையடுத்து அவர்களுக்கு அவர்களுக்கு கொழும்பு நீதிவான் நீதிமன்றம் நேற்று அவர்களுக்கு பயணத் தடை விதித்தது.

இதனிடையே, டான் பிரியசாத் கொலை பாதள உலகக் குழுக்களில் ஒன்றான கஞ்சிப்பான இம்ரான் தரப்பால் செய்யப்பட்டிருக்கலாம் என்றும் பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.

டான் பிரியசாத் நடைபெறவுள்ள உள்ளூராட்சி சபைத் தேர்தலில் பொதுஜன பெரமுன சார்பில் கொலன்னாவை நகர சபையில் போட்டியிடவிருந்தார். அறகலயவினருக்கு எதிரான தாக்குதலிலும் அறியப்பட்டவராக இவர் இருந்தார் என்பதும் குறிப்பிடத் தக்கது. (ஐ)

## அமெரிக்கா...

குழுவில் நிதி, திட்டமிடல் பிரதி அமைச்சர் கலாநிதி ஹர்ஷன சூரியப்பெரும வர்த்தக அமைச்சின் செயலாளர் மற்றும் அமெரிக்காவுக்கான இலங்கை தூதுவர் ஆகியோர் பங்கேற்றிருந்தனர் என்று தொழில் அமைச்சர் அனில் ஜெயந்த பெர்னாண்டோ தெரிவித்தார். அமெரிக்க அதிகாரிகளுடனான பேச்சுகள் பயனுள்ளவையாக இருந்தன என்றும் அமைச்சர் கூறியுள்ளார்.

இதனிடையே, அமெரிக்காவுக்கும் இலங்கைக்கும் இடையிலான பரஸ்பர வரிகள் குறிப்பிடத்தக்க பொருளாதார சவால்களை உருவாக்கியுள்ளன. அமெரிக்காவின் திருத்தப்பட்ட வர்த்தக கொள்கையின் கீழ், இலங்கை பொருட்களுக்கு 44 சதவீதம் வரை வரிகள் விதிக்கப்பட்டுள்ளன. இது, இலங்கையின் முக்கிய ஏற்றுமதித் தொழிலான ஆடைத் துறையைப் பெரிதும் பாதிக்கிறது. வாஷிங்டனில் நடக்கும் கலந்துரையாடல்கள் இரு தரப்பு வர்த்தகத்தை மேம்படுத்துவதற்கான வழிகளை ஆராய்வதற்கு மேற்கொள்ளப்படும் முயற்சிகளின் ஒரு பகுதியாக அமைந்துள்ளது என்றும் சுட்டிக்காட்டப்பட்டது. (ஐ)

## முன்னாள்...

இரண்டாக மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. இதற்கமையகூடுதலாக பெற்ற அனைத்து வாக னங்களையும் உடனடியாக ஜனாதிபதி செயலகத்தில் ஒப்படைக்குமாறு முன்னாள் ஜனாதிபதிகளுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், ஒரு முன்னாள் ஜனாதிபதிக்கு வழங்கப்படும் மாதாந்த எரிபொருள் கொடுப்பனவை 900 லீற்றராக மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. இது முன்னர், 2 ஆயிரத்து 250 லீற்றராகக் காணப்பட்டது என்பது குறிப்பிடத் தக்கது. (ஐ)

## அரசாங்க...

கட்சிகளுடன் சேர்ந்து ஆட்சி அமைக்க முயல்வோம் - இவ்வாறு தெரிவித்துள்ளார் தமிழ் மக்கள் கூட்டணியின் பொதுச் செயலாளர் க. வி. விக்னேஸ்வரன்.

தமிழ் மக்கள் கூட்டணியின் யாழ். மாவட்ட உள்ளூராட்சி வேட்பாளர்கள் அறிமுகம் நேற்று கொக்குவிலில் நடைபெற்றது. இதில் பங்கேற்று பேசிய போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

மேலும், பொதுவாக அரசாங்கக் கட்சியை நாம் புறக்கணிப்போம். அரசாங்க கட்சி உள்ளூராட்சி மன்றங்களில் ஆட்சி அமைப்பதை நாம் தடுக்கவே செய்வோம். அரசாங்கத்தின் ஒரு முக்கிய கோட்பாட்டின் விளைவே எம்மை இதுபற்றி ஆழமாக சிந்திக்க வைத்துள்ளது. தமக்கு வாக்களித்தால் மட்டுமே நிதி வசதிகள் எமது உள்ளூராட்சி மன்றங்களுக்குக் கிடைக்கும் என்றிருக்கிறார்கள் ஆளும் தரப்பினர். அவர்கள் பதவிக்கு வந்தால் எம்மை அடிமையாக்கி விடுவார்கள் என்பது இதிலிருந்து புலப்படுகிறது. அந்த விதத்தில் தமிழ்த் தேசியக் கட்சிகள் யாவும் எமது உறவுகளே என்பதும் அரசாங்கத்துடன் சேர்ந்து செல்லும் கட்சிகள் அனைத்தும் வட, கிழக்குவாழ் தமிழ் மக்களின் தற்கால, வருங்கால நல்வாழ்வுக்குப் பங்கம் விளைவிப்பவர்களே என்பதும் புலனாகின்றது. நாம் உள்ளூராட்சி மன்றங்களை எடுத்து நிர்வகிக்கும்போது அரசாங்கத்தையே நம்பி இருக்கப் போவதில்லை. எமது உள்ளூராட்சி அலகுகளை தனியார் துறையுடன் சேர்ந்து முன்னேற்ற விழைவோம்.

இன்று தமிழ்த் தேசியம் என்றுமில்லாத வகையில் அரசியல் ரீதியாக மிகப்பெரும் சவாலை எதிர்கொண்டிருக்கும் காலகட்டத்தில் நாம் நின்றுகொண்டிருக்கிறோம். சுதந்திரம் கிடைத்தபின்னர் இன்றுள்ளதுபோல என்றைக்குமே தமிழர் தாயகத்தில் தமிழ்த் தேசியம் சிங்கள அரசியல் கட்சிகளின் ஆதிக்கத்துக்கு அஞ்சவேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது இல்லை. இதற்கு பல காரணங்கள் இருக்கின்றன. அவற்றை விவரிப்பது இப்போது இங்கு பொருத்தமல்ல. ஆனால், 2009ஆம் ஆண்டுக்கு பின்னர் எந்த ஒரு தமிழ் அரசியல் கட்சியினதும் செயல்பாடுகள் அரசியல், பொருளாதார ரீதியாக தமிழ் மக்களுக்கு பலாபலன்களை பெற்றுக் கொடுக்க தவறியமையே பிரதான காரணம் ஆகும்.

கடந்த தேர்தல்களில் மக்கள் எம்மை நம்பி பல தடவைகள் வாக்களித்து எமக்கு சந்தர்ப்பம் தந்திருந்தார்கள். ஆனால், எந்த ஒரு தமிழ் அரசியல் கட்சியும் மக்களின் எதிர்பார்ப்புகளை நிறைவேற்றவில்லை. இந்த ஏமாற்றமும் கோபமும் இன்று சிங்கள அரசியல் கட்சிகளுக்கு பாகியிருக்கின்றது. எம்முள் சிலர் பல எத்தனிப்புகளில் ஈடுபட்டும் சிங்கள அரசியல்வாதிகளால் ஏமாற்றப்பட்டோம். ஆகவேதான், எதிர்வரும் உள்ளூராட்சி சபை தேர்தல் எமக்கு மிகவும் முக்கியமானது. ஒருபுறம் எமது கட்சி சில சபைகளிலாவது உள்ளூராட்சி அதிகாரத்தை கைப்பற்ற வேண்டிய தேவை. மறுபுறம் தமிழ்த் தேசிய அரசியல், சிங்கள அரசியல் கட்சிகளால் சிதைக்கப்படுவதில் இருந்து பாதுகாக்கப்பட வேண்டிய தேவை உள்ளது - என்றார். (ஐ)

# மரபுகளைப் பேணுதலே இருப்பை உறுதிசெய்யும்

## சிறீதரன் எம்.பி. தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஏப். 24

எமது வாழ்வியலின் கூறுகளான கலை, கலாசார, பண்பாட்டு மரபுகளைப் பேணுவதும், அவற்றின் தனித்துவம் குறையாது அடுத்த சந்ததியிடம் கையளிப்பதுமே எமது இருப்பை உறுதிசெய்யும் என இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினரும், பாராளுமன்றக் குழுத் தலைவருமான சிவஞானம் சிறீதரன் தெரிவித்துள்ளார்.

அராலி ஸ்ரீ முருகன் சனசமூக நிலையத்தின் 85ஆம் ஆண்டு விழாவின் முதல் நாள் நிகழ்வுகள் நிலைய கலையரங்கில் விழாக்குழுத் தலைவர் மஞ்சுளா புஸ்பராசா தலைமையில் இடம்பெற்றன. இந்த நிகழ்வின் பிரதம விருந்தினராக கலந்துகொண்டு, ஆண்டு விழாவை முன்னிட்டு நடைபெற்ற விளையாட்டுப் போட்டிகளில் வெற்றிபெற்ற வீரர்களுக்கான மதிப்பளிப்பை வழங்கிவைத்து உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்திருந்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இருப்பழிந்துவரும் எமது சமூக மற்றும் வாழ்வியல் அடையாளங்களை மீள் நினைவூட்டும் வகையிலான கலை, கலாசார, விளையாட்டு நிகழ்வுகளை ஒழுங்கமைப்பதன் மூலம், இளைய சமுதாயத்தினரிடம் எமது மரபியல்கள் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்த முடியும். அத்தகைய சமூகநிலைப்பட்ட சிந்தனைக்கு செயல்வடிவம் கொடுத்திருக்கக்கூடிய அராலி ஸ்ரீ முருகன் சனசமூக நிலையத்தினரை நான் மனதாரப் பாராட்டுகிறேன்.

சமூக நிறுவனங்களே ஒரு சமூகத்திற்கு அடையாளம் தரவல்லன என்ற அடிப்படையில் அராலி மண்ணின் அடையாளமாக உருவாகி, 85 ஆண்டுகளைக் கடந்தும் தன் செயல்நோக்கில் தளராது இயங்கிக்கொண்டிருக்கும் ஸ்ரீ முருகன் சனசமூக நிலையத்தின் சமூகப் பணிகள் காலப்பெறுமதி மிக்கவை- என்றார். (அ)

## நாடளாவிய

ஏற்பட்டதாக இலங்கை மின்சார சபை தெரிவித்துள்ளது.

மின் தடைக்கான அறிக்கையை சமர்ப்பித்து அந்தக் குழு இதனை வெளிப்படுத்தியுள்ளது. இந்த குழுவின் முழு அறிக்கையும் இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் இணையதளத்தில் பெற்றுக்கொள்ள முடியும் என்றும் இலங்கை மின்சார சபை தெரிவித்துள்ளது. (ஐ)

## வெள்ளி...

வெற்றுக் கண்களால் அதிகாலை 4 மணி முதல் சூரிய உதயம் வரை காணமுடியும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

அதிகாலையில் மூன்று பிரகாசமான பொருட்களை மக்கள் நெருக்கமாக பார்க்க இது ஒரு சிறந்த வாய்ப்பு என்று தெரிவித்துள்ள வானியலாளர்கள் இந்த நிகழ்வை காண்பதற்கு தெளிவான வானம் கொண்ட திறந்தவெளிகளில் நின்று பார்வையிடுமாறும் கூறினர். (ஐ)

## துப்பாக்கி...

பங்கேற்றபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

மேலும், "இன்று பாதுகாப்பே இல்லாத நாட்டில் நாம் வாழ்ந்து வருகிறோம். சட்டத்தின் ஆட்சி கோலோச்சாது காட்டுச் சட்டமே கோலோச்சி போட்டிக்கு கொலை செய்யும் கலாசாரம் தலைதூக்கி காணப்படுகிறது. திட்டமிட்டு குற்றச்செயல்களில் ஈடுபடும் கும்பல்கள் இன்று சமூகத்தை ஆட்கொண்டுள்ளன. வீட்டுக்குள் நுழைந்து சுடும் நிலைக்கு நாடு வந்துள்ளது. சுதந்திர நாடாக அமைந்து காணப்பட்டாலும் மக்களுக்கு சுதந்திரம் இல்லை. அனைவரும் அச்சத்துடனேயே வாழ்ந்து வருகின்றனர்.

இன்று ஆட்சி செய்வது மக்களின் இறையாண்மையோ அல்லது நாட்டின் சட்டமோ அல்ல. மாறாக ரி -56 துப்பாக்கி தோட்டாக்கள் மற்றும் குண்டுகளே ஆளுகின்றன. மக்கள் விடுதலை முன்னணி அரசாங்கத்துக்கு சட்டத்தை அமுல்படுத்த முடியாத நிலை காணப்படுகிறது. குழந்தைகள் முன்னிலையில் கூட கொலைகள் இடம்பெறும் நிலைக்கு நாடு வந்துள்ளது. கொலைகள் சாதாரணமாகி விட்டன. இந்த விடயங்கள் குறித்து கேள்வி எழுப்பும் போது, திசைகாட்டியின் கருத்துப்படி இது தேசிய பாதுகாப்பை பாதிக்காது என்று அரசாங்கம் கூறுகிறது. இந்தக் கொலைக் கலாச்சாரத்தை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரவும், இதனை இல்லாதொழிக்கவும் இந்த அரசிடம் எந்த திட்டமும் இல்லை, முது கெலும்பும் இல்லை. - என்றும் கூறினார். (ஐ)

## வடக்குக்கு...

அவர் வவுனியா, முல்லைத்தீவு மாவட்டங்களுக்கு வருகை தரவுள்ளார்.

ஜனாதிபதி அநுரகுமார கடந்த 17ஆம் திகதி யாழ்ப்பாணம், மன்னார் மாவட்டங்களில் நடந்த பிரசாரக் கூட்டங்களில் பங்கேற்றிருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ-10)

## தமிழ்த்...

என்ற செய்தியை சொல்ல வேண்டும் - அதை மக்கள் செய்வார்கள் என்ற நம்பிக்கை உள்ளது.

பாராளுமன்றத் தேர்தலில் ஜே. வி. பிக்கு வாக்களித்து தமிழ் மக்கள் தவறிழைத்தனர். அதனை தற்போது அவர்கள் உணர்ந்துள்ளனர். பெரும்பாலானவர்கள் ஜே. வி. பியை நிராகரிக்கும் நிலைமை உள்ளது - என்றார். (ஐ)

## முஸ்லிம்...

முஸ்லிம் காங்கிரஸின் பாராளுமன்ற உறுப்பினர் நிஷாம் காரியப்பர் தெரிவித்துள்ளார்.

"இப்போது நாட்டில் தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்துக்கு பெரும் சவால் ஏற்பட்டுள்ளது. ஸ்ரிக்கர் ஒட்டிய ருஸ்தியை பய்ஙகரவாத தடை சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டமைக்கு அவரின் பெற்றோர்கள் நன்றி தெரிவித்ததாக சொன்னார்கள். இப்படி பொய்யான வாதங்களை முன்வைக்கின்ற அரசாங்கமாக மாறியிருப்பது எனக்கே புதினமாக இருக்கிறது.

ஈஸ்டர் குண்டுத் தாக்குதலுக்கு காரணமானவர்களை பிடிக்கப் போகிறேன் என்று சொன்னார்கள். பயங்கரவாத தடைச் சட்டம் இதற்காக இன்னும் பயன்படுத்தவில்லை. ஜனாதிபதி, 4 வருடங்களுக்கு முன்னர் தயாரிக்கப்பட்ட அறிக்கையை இப்போது சி. ஐ. டியிடம் கொடுத்துள்ளார். ஜனாதிபதியாகி ஏழு மாதங்களகியுள்ள நிலையில் இந்த அறிக்கையை அப்போதே கொடுத்திருந்தால், இப்போது நடவடிக்கை எடுத்திருக்கலாம் அல்லவா?

ஈஸ்டர் தாக்குதல்தாரிகளை கைது செய்வேன் என்று பெரிதாகப் பேசியவர், ஒன்றும் செய்ய முடியாமல் அறிக்யையை சி. ஐ. டியிடம் கொடுத்துள்ளார். இதை அவர் தெரியாமல் செய்யவில்லை. தெரிந்து கொண்டுதான் செய்கிறார். - இவ்வாறு நேற்று முன்தினம் அட்டாளைச்சேனையில் நடந்த பிரசாரக்கூட்டத்தில் அவர் கூறினார். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu ඊළනාඩු

# இலங்கை மீதான அமெரிக்க வரி; வாஷிங்டனில் உயர் மட்டப் பேச்சு

கொழும்பு, ஏப். 24

**அமெரிக்க வர்த்தக பிரதிநிதிகளுக்கும் இலங்கை அதிகாரிகளுக்கும் இடையே வரி தொடர்பிலான உயர்மட்ட கலந்துரையாடல் வோஷிங்டனில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை இடம்பெற்றது.**

பரஸ்பர வரிகளால் ஏற்படும் தொடர்ச்சியான சவால்களை நிவர்த்தி செய்வதே இந்த சந்திப்பின் நோக்கமாகும்.

இலங்கை பிரதிநிதிகள் குழுவில் நிதி மற்றும் திட்டமிடல் பிரதி அமைச்சர் கலாநிதி ஹர்ஷன சூரியப்பெரும, வர்த்தக அமைச்சின் செயலாளர் மற்றும் அமெரிக்காவுக்கான இலங்கைத் தூதுவர் ஆகியோர் இடம்பெற்றதாக தொழில் அமைச்சர் அனில் ஜெயந்த பெர்னாண்டோ தெரிவித்தார்.

பேச்சுவார்த்தை பயனுள்ளதாக இருந்ததாகவும் அமைச்சர் கூறினார். அமெரிக்காவுக்கும் இலங்கைக்கும் இடையிலான பரஸ்பர வரிகள் குறிப்பிடத்தக்க பொருளாதார சவால்களை உருவாக்கியுள்ளன.

அமெரிக்காவின் திருத்தப்பட்ட வர்த்தகக் கொள்கையின் கீழ், இலங்கைப் பொருட்களுக்கு 44 வீத வரை வரிகள் விதிக்கப்பட்டுள்ளன. இதனால் குறிப்பாக இலங்கையின் முக்கிய ஏற்றுமதித் தொழிலான ஆடைத் துறையைப் பெரிதும் பாதிக்கிறது. (அ)

## நுகர்வோர் பாதுகாப்பு சட்டங்களை மீறிய 1,200 வியாபாரிகள் மீது சட்ட நடவடிக்கை!

கொழும்பு, ஏப். 24

பண்டிகைக் காலத்தில் நுகர்வோர் பாதுகாப்புச் சட்டங்களை மீறிய 1,200 சில்லறை வியாபாரிகள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கவுள்ளதாக நுகர்வோர் விவகார அதிகார சபை தெரிவித்துள்ளது.

கடந்த மார்ச் மாதம் 25 ஆம் திகதி முதல் இந்த மாதம் 12 ஆம் திகதி வரை மேற்கொள்ளப்பட்ட சோதனை நடவடிக்கைகளின் பிரகாரம் குறித்த சில்லறை வியாபாரிகள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

அதிக விலைக்குப் பொருட்களை விற்பனை செய்தமை, விலைகளைக் காட்சிப்படுத்தாமை நுகர்வோரை ஏமாற்றுதல் உள்ளிட்ட பல்வேறு குற்றங்களுக்காக இவர்கள் மீது வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

கண்டியில் சுமார் 25 சில்லறை வியாபாரிகள் அதிக விலைக்கு பொருட்களை விற்பனை செய்ததாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. (அ)

## ஒப்பந்தங்களை வெளியிட இந்திய ஒப்புதல் தேவை!

### அமைச்சரவை பேச்சாளர் தெரிவிப்பு

கொழும்பு, ஏப். 24

பிரதமர் மோடியின் விஜயத்தின் போது இந்தியாவுடன் கையெழுத்திடப்பட்ட ஏழு புரிந்துணர்வு ஒப்பந்தங்களையும் அரசாங்கம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கும். சில தகவல்களை வெளியிட இரு தரப்பினரின் ஒப்புதல் தேவைப்படுவதால் சிறிது காலம் எடுக்கும் என அமைச்சரவை பேச்சாளர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.



அரசாங்கம் புரிந்துணர்வு ஒப்பந்தங்களில் மட்டுமே கையெழுத்திட்டுள்ளதாகவும், அவை தொடர்பான அனைத்து தகவல்களையும் பாராளுமன்றத்தில் தாக்கல் செய்யப்படும் என்றும் அவர் கூறினார்.

புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் தொடர்பான தகவல்களை அவசரமாக யாராவது கோரினால், அவர்கள் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் ஊடாக இதனைப் பெறலாம்.

சட்டமா அதிபரின் ஒப்புதலுடனும், தொடர்புடைய அமைச்சகங்களுடன் விரிவான கலந்துரையாடல்கள் நடத்தப்பட்ட பின்னரே புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்தானதாகவும் அமைச்சர் கூறினார். (அ)

## தனிநபரொருவர் அடிப்படைத் தேவைகளை பூர்த்தி செய்ய 16,000 ரூபாவுக்கு மேல் தேவை

கொழும்பு, ஏப். 24

தனிநபரொருவரின் அடிப்படை தேவைகளை பூர்த்தி செய்வதற்கு மாதம் ஒன்றிற்குத் தேவையான குறைந்த பட்ச தொகை 16,318 ரூபா என தெரிவிக்கப்பட்டுள்ளது.

மக்கள் தொகை கணக்கெடுப்பு மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களம் வெளியிட்டுள்ள அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அடிப்படை தேவைகளை பூர்த்தி செய்ய மாதமொன்றிற்கு அதிகம் செலவாகும் மாவட்டமாக கொழும்பு பெயரிடப்பட்டுள்ளது.

இதன்படி, கொழும்பில் அடிப்படை தேவைகளை பூர்த்தி செய்ய மாதமொன்றிற்கு 17,599 ரூபா தேவை என குறிப்பிடப்பட்டுள்ளது.

அத்துடன் மாதமொன்றின் அடிப்படை தேவைகளை பூர்த்தி செய்ய குறைந்தளவு செலவாகும் மாவட்டமாக மொனராகலை பெயரிடப்பட்டுள்ளது.

இதற்கமைய அங்கு அடிப்படை தேவைகளை பூர்த்தி செய்ய 15,603 ரூபா தேவையென தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் 2025 பெப்ரவரி மாதத்தில் தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண்ணின் மதிப்பு ஜனவரி மாதத்துடன் ஒப்பிடுகையில் குறைவடைந்துள்ளதாக மக்கள் தொகை கணக்கெடுப்பு மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது. (அ)

## விமான தபால் சேவை மூலம் அனுப்பிய பொதிகளில் போதைப்பொருட்கள் மீட்பு!



கொழும்பு, ஏப். 24

வெளிநாடுகளிலிருந்து விமான தபால் சேவை மூலம் கொழும்பு மத்திய தபால் பரிமாற்ற நிலையத்திற்கு அனுப்பி வைக்கப்பட்ட பொதிகளிலிருந்து குஷ் மற்றும் ஹஸிஸ் உள்ளிட்ட போதைப்பொருட்கள் சுங்க அதிகாரிகளால் நேற்று கைப்பற்றப்பட்டன.

கைப்பற்றப்பட்ட போதைப்பொருட்களின் மொத்த பெறுமதி 15 கோடியே 45 இலட்சத்து 50 ஆயிரம் ரூபா என சுங்க அதிகாரிகள் தெரிவித்தனர்.

இந்த பொதிகள் அமெரிக்கா, இங்கிலாந்து மற்றும் பாகிஸ்தான் ஆகிய நாடுகளிலிருந்து விமான தபால் சேவை மூலம் நீர்கொழும்பு, கந்தானை, கணேமுல்ல, மாலம்பே மற்றும் கொழும்பு ஆகிய பிரதேசங்களில் உள்ள பல முகவரிகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக சுங்க அதிகாரிகள் கூறினர்.

12 கிலோ 677 கிராம் குஷ் போதைப்பொருளும் 01 கிலோ 852 கிராம் ஹஸிஸ் போதைப்பொருளுமே கைப்பற்றப்பட்டதாக சுங்க அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

கைப்பற்றப்பட்ட போதைப்பொருட்கள் மேலதிக விசாரணைகளுக்காக கொழும்பு பொலிஸ் போதைப் பொருள் தடுப்புப் பிரிவினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. (அ)

## 8 கிலோ கிராம் தங்கத்துடன் இருவர் கடற்படையால் கைது!

மன்னார், ஏப். 24

தலைமன்னார் - உறுமலை கடற்கரைப் பகுதியில் கடல் வழியாகச் சட்டவிரோதமாகக் கடத்தப்படவிருந்த தங்கத்துடன் இரண்டு சந்தேக நபர்களைக் கடற்படை கைது செய்துள்ளது.

இதன்போது சட்டவிரோதமாக இந்தியாவுக்குக் கொண்டு செல்லத் தயாராக இருந்ததாகச் சந்தேகிக்கப்படும் 8 கிலோ 960 கிராம் தங்கம் மீட்கப்பட்டுள்ளது.

கைதான சந்தேக நபர்கள் இருவரும் தலைமன்னார், உறுமலை பகுதியைச் சேர்ந்தவர்கள் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மீட்கப்பட்ட தங்கம் மற்றும் படகுடன் சந்தேக நபர்கள் இருவரும் காங்கேசன்துறை சுங்க அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

## நாட்டில் அதிகரிக்கும் மலேரியா காய்ச்சல்!

கொழும்பு, ஏப். 24

இலங்கையில் மலேரியா மீண்டும் அதிகரித்து வருவதாகவும், சமீபத்தில் வெளிநாடுகளில் இருந்து திரும்பிய நபர்களிடம் இது கண்டறியப்பட்டுள்ளதாகவும் சுகாதார அதிகாரிகள் எச்சரிக்கின்றனர் என்று சுகாதார மேம்பாட்டு பணியகம் தெரிவித்துள்ளது.

மலேரியா எதிர்ப்பு பிரசாரத்தின் ஆலோசகர் சமூக மருத்துவர் டாக்டர் புபுது சூலசிறி கூறினார். மலேரியா மீண்டும் வருவதைத் தடுக்க இலங்கை ஒரு வலுவான திட்டத்தை பராமரித்து வருகிறது, பயணிகள் இந்த நோயுடன் திரும்புவதற்கான தொடர்ச்சியான ஆபத்தை அங்கீகரித்துள்ளது.

இலங்கையில், 2023 இல் 62 மலேரியா நோயாளிகள் இருந்தனர், ஒரு மரணம் ஏற்பட்டது, அதே நேரத்தில் 2024 இல் 38 வழக்குகள் மற்றும் ஒரு மரணம் பதிவாகியுள்ளது. 2025 இல் இதுவரை 14 வழக்குகள் அடையாளம் காணப்பட்டுள்ளன.

உலக சுகாதார அமைப்பு செப்ரெம்பர் 2016 இல் இலங்கையை மலேரியா இல்லாததாக சான்றளித்தது, உள்நாட்டு பரவலை நீக்குவதில் அதன் வெற்றியை ஒப்புக்கொண்டது என்று டாக்டர் சூலசிறி மேலும் கூறினார். (அ)

# இராமர் பாலத்தின் மணல் திட்டுகளை சுற்றுலா பயணிகள் பார்வையிடலாம்!

மன்னார், ஏப். 24

தலைமன்னார் - ஊர்மனை பகுதியை அண்மித்துள்ள இராமர் பாலத்தின் 6 மணல் திட்டுகளை எதிர்வரும் மே மாதம் 15 திகதி முதல் சுற்றுலாப் பயணிகள் பார்வையிடுவதற்கு அனுமதி வழங்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் கனகசபாபதி கனகேஸ்வரன் தலைமையில் மாவட்ட செயலகத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலில் இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. வடமாகாண சுற்றலாப் பணியகத்தின் தலைவர், மன்னார் மாவட்ட வனஜீவராசிகள் திணைக்கள உதவி பணிப்பாளர், பிரதேச செயலாளர், கடற்படையினர், கடற்றொழிலாளர் சங்கத்தின் பிரதிநிதிகள், காவல்துறையினர் உள்ளிட்ட பலர் இதில் கலந்து கொண்டிருந்தனர்.

இராமர் பாலத்தினை பார்வையிடுவதற்கான படகுப் போக்குவரத்தினை ஆரம்பிப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளதாகவும், அதனை ஆரம்பிப்பது தொடர்பில் கலந்துரையாடுவதற்கான குழுவொன்று அமைக்கப்பட்டுள்ளதாகவும் மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் கனகசபாபதி கனகேஸ்வரன் தெரிவித்தார். சுற்றுலாப் பயணிகளை ஏற்றிச் செல்லும் படகு மற்றும் அது தொடர்பிலான வழிகாட்டுதல்கள் தயாரிக்கப்படவுள்ளன. இது தொடர்பில் முன்னதாகவே பாதுகாப்பு அமைச்சு அனுமதியினை வழங்கியிருந்தது.

எனினும், அது நீண்டகாலமாக நடைமுறைப்படுத்தப்படாமல் இருந்த நிலையில், தொடர்புடைய தரப்பினருடன் கலந்துரையாடி, தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் கனகசபாபதி கனகேஸ்வரன் கூறினார். அடுத்த கட்டமாகச் சுற்றுலாப் பயணிகளிடம் அறவிடப்படும் கட்டணங்களை நிர்ணயிப்பதற்கு நேற்றைய கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 24.04.2025 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org